தமிழ்நாட்டுக்
கல்வி இயக்கம்

# மூன்றாம் ஆண்டு மாநாட்டு மலர்

## தி.பி.2048 (கி.பி.2017)

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

## புதுக்கோட்டை

# முகவுரை

தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு மலர் அமைந்து ஆற அமர செய்யப்பெறாமல் விரைவு விரைவாக முடிக்கப்பெற வேண்டியதாகிவிட்டது.

அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு,

ஒன்று அனைத்திந்திய தகுதி நுழைவுத் தேர்வைத் (நீட்) தமிழ்நாட்டில் திணித்ததும்,

அதனால் நெருக்கடிகளுக்குள்ளாகிய மாணவி அனிதாவின் தற்கொலையும் தமிழக அளவில் கொடுத்த பெருந்தாக்கத்தையொட்டித் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத் தோழர்கள் அதற்கு முகங்கொடுத்துத் தமிழகத்தில் ஆங்காங்கு நடைபெற்று வரும் போராட்டங்களில் கலந்து கொண்டதும்தான்.

தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் தொடங்கப்பட்ட 2014ஆம் ஆண்டின் காலச் சூழலைக் காட்டிலும் இப்போது தமிழகக் கல்வித்துறை இன்னும் மேலதிகமாக இந்திய; பன்னாட்டுக் கல்வி உரிமை பறிப்பு அதிகார வெறித்தன்மையால் பாதிப்படைந்துள்ளது.

1976 தொடங்கிப் பறிக்கப்பட்ட நம் தமிழ்நாட்டுக் கல்விமுறை படிப்படியாக இன்றைக்கும் முழுமையாகப் பறிபோன நிலையில் உள்ளது.

அதை மீட்டெடுக்கிற முயற்சியில் மாணவர்கள் ஆசிரியர்களின் போராட்ட நிகழ்வுகள் வரவேற்கக்கூடியனவாக இருந்தாலும் போதுமானவையாக இல்லை என்பதை அறிய வேண்டும்.

‘நீட்’ தேர்வை நடத்துவதற்கான வேலைத்திட்டத்தைக்கூட, அதன்வழியான வருவாயைக்கூட பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்திருக்கிறது இந்திய அரசு.

எனவே, இவற்றையெல்லாம் எதிர்த்துக் களம் கண்டு ஏழை எளிய மாணவர்களின் கல்வி உரிமையைக் காப்பதற்குப் பெரு முயற்சி எடுத்தாக வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டுக்கல்வி இயக்கம் அவற்றுக்கான பெரு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அதற்காக மாணவர்களிடையே, வெகு மக்களிடையே கருத்துகளைப் பரப்புகிறது. அவர்களை விழிப்படைய வைக்கிறது.

அவ்வகையில் அதற்கான கருத்துக் கருவூலமாக இம் மலரைக் கொண்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளின் மலர்களைவிட, இந்த மலர் குறைந்த பக்கங்களைக் கொண்டதாக இருந்தாலும் மிகக் குறைந்த விலையில் நிறைய மாணவர்களைச் சென்றடைய வேண்டுமான நோக்கில் அணியப்படுத்தப்பட்டது.

இதற்காக உழைப்பெடுத்து துணைநின்ற அன்புள்ளத்தினர் அனைவருக்கும் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் சார்பில் மிகுந்த நன்றிகளைத் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வெளியீட்டை முழு பயனாக்குவது தமிழ்நாட்டுக் கல்வியில் அக்கறையுள்ள ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

நன்றி,

தோழமையுடன்,
ஒருங்கிணைப்புக் குழுவினர்,
தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்.
கைப்பேசி : 8608068002, 7305826171, 9962101000

*செய்தித்தாள் உள்ளிட்ட பிற பதிவுகளிலிருந்து...*



# தமிழ்நாட்டுக் கல்வி முழுக்க முழுக்கத் தமிழகத்திற்கான உரிமை என்பது மீண்டும் அரசியலமைப்புச் சட்டப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## திரைப்பட நடிகர் சூர்யா

....இலட்சக்கணக்கான ரூபாய் பணம் செலுத்தி, சிறந்த பள்ளியில் படித்து, தனிப் பயிற்சிகள் மேற்கொண்டு, நல்ல வாடிக்கைத் தரத்தோடு இருக்கும் மாணவர்களுக்கும், இப்படி எந்த வசதி வாய்ப்பும் இல்லாத மாணவர்களுக்கும் 'ஒரே நாடு; ஒரே தேர்வு' என்ற பெயரில் ஒரு தேர்வை நுழைப்பது எவ்வளவு பெரிய வன்முறை! நந்தனாரை 'நெருப்புக்குள் சென்று தூய்மை அடைந்தபிறகு கோயிலுக்குள் வா' என்று சொன்ன அந்தக் காலத் தீண்டாமைக்கும் 'நிறையப் பணம் செலவழித்துத் தனி கோச்சிங் எடுத்து 'நீட்' போன்ற பல்வேறு நுழைவுத்தேர்வுகளில் வெற்றித் தகுதியை நிரூபித்த பிறகு கல்லூரியில் படிக்க வா!' என்று சொல்வதற்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கிறது?

### கல்வியின் மூலம் ஏற்றத்தாழ்வு

பாகுபாடுள்ள பள்ளிகள், பாகுபாடுள்ள கல்வி முறை, வசதிக்கேற்ற விதவிதமான பாடத்திட்டங்கள் என எல்லா நிலைகளிலும் பாகுபாட்டை நிறுவிவிட்டு, ஒரேவிதமான தேர்வு முறையில் வெற்றிபெற வேண்டும் என்று சொல்வது நாகரிக சமுதாயம் செய்கிற வேலை இல்லை. வளர்ந்த நாடுகள் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைக் கல்வியின் மூலம் உருவாக்கிக்கொண்டிருக்கும் போது, இந்தியாவில் கல்வியின் மூலமே ஏற்றத் தாழ்வுகளை இன்னும் அதிகமாக்கிக் கொண்டிருக்கிறோம். தீண்டாமையின் புதிய வடிவமாக, 'தரமான கல்வி, தகுதியான மாணவர்கள்' என்கிற முழக்கம் முன்வைக்கப்படுகிறது.

பொதுவாக இப்போது அரசுப் பள்ளிகளும், கல்லூரிகளும் தரமற்றவையாகிக் கொண்டே வருகின்றன. 'காசு கொடுத்தால்தான் இங்கே தரமான கல்வி கிடைக்கும்' என்று மக்களை நம்பவைத்து, தாலியையும், சோறு போடும் மண்ணையும் விற்றுக் கல்விக் கட்டணம் கட்ட வைக்கிறார்கள். அனைவருக்கும் பொதுவான, தரமான இலவசக் கல்வியை வழங்கவேண்டிய அரசாங்கம், தனது பொறுப்பைத்' தட்டிக்கழித்து விட்டு, தகுதிப்படுத்துகிற நுழைவுத் தேர்வுகளை நடத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது?

### இனி நாம் என்ன செய்யவேண்டும்?

இந்த 'நீட்' தேர்வு மட்டுமே நமது கல்வி முறையின் ஒற்றைப் பிரச்சினை இல்லை. பல்வேறு குறைபாடுகள் கொண்ட நம் கல்விமுறையின் சமீபத்திய பலி அனிதா என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நம் கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ அனிதாக்கள் இதுபோல் இருக்கிறார்கள்.

ஏழைகளுக்கு ஒரு கல்வி, பணம் படைத்தவர்களுக்கு ஒரு கல்வி. பிறகு, இருவருக்கும் ஒரே தேர்வு என்பதை எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை அனைவருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும்.

காலத்துக்கேற்ற பாடத்திட்டம், திறமையான ஆசிரியர்கள், அனைவருக்கும் பொதுவான அடிப்படை வசதிகள் கொண்ட பள்ளிகளை உருவாக்க அரசாங்கத்தை வலியுறுத்தி, நடைமுறைப்படுத்த வேண்டும். வளர்ந்த நாடுகள் அனைத்திலும் 'பொதுப் பள்ளி' முறைதான் நடைமுறையில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### அதிகார மையங்களைக் கட்டுப்படுத்துவோம்

நுழைவுத் தேர்வை மத்திய அரசு கொண்டுவரும். மாநில அரசு 'நுழைவுத் தேர்வு இல்லை' என்று அறிவிக்கும். நீதிமன்றங்கள் மாணவர்களின் எதிர்காலத் தைக் கவனத்தில் கொள்ளாமல், மத்திய - மாநில அரசுகளின் நிலைப்பாட்டை வைத்துத் தீர்ப்புகள் எழுதும். சொந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகும்போதுகூட எவ்விதமான எதிர்வினையும் ஆற் றாமல் மக்கள் இருப்பார்கள். இந்த நிலை நீடித்தால் எந்த மாற்றமும் வராது. மாணவர்கள் நலனைப் பாதிக்கும் எந்தச் செயலையும் எதிர்த்து மக்கள் குரல் கொடுக்க வேண்டும். மக்கள் எதிர்ப்பு மட்டுமே இந்த அதிகார மையங்களைக் கட்டுப்படுத்தும்.

இந்தியா என்பது ஒரே மொழி, ஒரே இனம், ஒரே பண்பாடு என்று சுருக்கிவிட முடியாது. கல்வி என்பது மாநிலங்களின் உரிமைக்கு உட்பட்ட அதிகாரமாக மாற வேண்டும். ஒரு மாநிலத்தின் தனித்துவமான கல் விப் பிரச்சினைகளை, அதைப் புரிந்துகொள்ள இய லாத பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர் மானிக்க அனுமதிக்கக்கூடாது. கல்வி முழுக்க முழுக்க மாநில உரிமை என்பது மீண்டும் அரசியலமைப்புச் சட்டப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தாய்மொழி வழிக் கல்விதான் சிறந்த கல்வி என்பது நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மை. வசதி வாய்ப்பற்ற பெரும்பான்மையான மாணவர்கள் அரசுப் பள்ளி களில் தமிழ் வழியில் பயில்கிறார்கள். உயர் கல்விக்கான நுழைவுத் தேர்வுகள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே என்பது அநீதியானது. ஆங்கிலம், இந்தி தவிர அந்தந்த மாநில மொழிகளிலும் நுழைவுத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

### கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டும்!

'அனிதாவின் மரணத்துக்கு யார் பொறுப் பேற்பது அரசே?' என்று மக்கள் சார்பில் நீங்கள் கேட்ட கேள்வி மத்திய - மாநில அரசுகளுக்கும் பொருந்தும். ஆனால், தற்போது நாம் போராட வேண்டியது நீட்டை எதிர்த்து அல்ல.. நீட் தமிழகத்துக்கு வர அடிப்படைக் காரணமாக இருந்த சட்டத் திருத்தத்தை எதிர்த்துதான் போராட வேண்டும். ஆம், மாநிலப் பட்டியலிலிருந்த கல்வியை பொதுப் பட்டியலுக்கு மாற்றியதை எதிர்த்தும் அதனை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கே கொண்டுவரவும் நாம் மத்திய அரசிடம் போராட வேண்டும். இன்றைக்கு மருத்துவப் படிப்புக்கான நீட்டை எதிர்த்து நாம் போராடிக்கொண்டிருக்கும் வேளையில், அலோபதி மற்றும் பல் மருத்துவத்துக்கு மட்டும் இருக்கும் நீட் தேர்வை மற்ற மருத்துவப் படிப்புகளுக்கும் (ஹோமியோபதி, சித்தா, நேச்ரோபதி, யுனானி) ஆயுர்வேதா கொண்டு வரப் போகிறார்கள். அதோடு, கால்நடை மருத்துவத்துக்கும் ஏன் பொறியியல் படிப்புகளுக்கும் 'நீட்'டைக் கொண்டு வந்துவிடுவார்கள். எனவே, தற்போதைய போராட்டங் கள் கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரப் போராட வேண்டுமே. தவிர, மருத்துவத்துக்கு நீட் வேண்டாம் என்று போராடுவது மட்டும் நிரந்தரத் தீர்வாக அமையாது.

## இந்திய அரசின் 'நிதி ஆயோக்' திட்டம் என்பது கல்வித்துறையைத் தனியாரிடம் ஒப்படைக்கும் ஓர் அயோக்கியத் திட்டம்

**வே. வசந்திதேவி**

*முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்*

அரசுப் பள்ளிகளின் குறை என்றால், அதைக் கண்டறிந்து மேம்படுத்துவதற்குப் பலவழிமுறைகள் இருக்கின்றன.

அரசோ கல்விக்காகச் செலவுசெய்யத் தயாராக இல்லை. கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி குறைந்து கொண்டே இருக்கிறது.

ஏற்கெனவே நிதி ஒதுக்கியதைக்காட்டிலும், இந்த ஆண்டு மிகவும் குறைவாக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். 2012-ல் மத்திய அரசு கல்விக்காக ஒதுக்கியது மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 0.69%. 2017-18 நிதியாண்டில் அது 0.41% நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. மாநில அரசு ஒதுக்கும் தொகையையும் சேர்த்தால் இதுவரை 3.7% என்ற அளவைத்தான் எட்டியிருக்கி றோம். குறைந்தபட்சம் 6% நிதியை நாம் கல்விக்காகச் செலவிட வேண்டும். கியூபாவில் 18% செலவழித்தார்கள். 10 ஆண்டுகளில் அவர்கள் எழுத்தறிவின்மை என்ப தையே இல்லாமல் ஆக்கிவிட்டார்கள். நாம் வாங்குகிற ஒவ்வொரு பொருளிலும் 3% கல்வி வரி வசூலிக்கும் அரசாங்கம், அதை யாருக்காகச் செலவழிக்கிறது?

அரசுப் பள்ளிகளில் சிறந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்ப தில்லை. அரசாங்கம் பள்ளிகளுக்குச் செலவழிக்கத் தயாராகவே இல்லை.

## பேரா. பிரபா கல்விமணி, கல்வியாளர்

தாய்மொழியால் மட்டுமே தரமான கல்வியைக் கொடுக்க முடியும். மேலைநாடுகளில், பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடுகளில் எல்லாம் தாய்மொழி வழிக் கல்வியைத்தான் பின்பற்றுகிறார்கள்.

கிராமப்புறப் பள்ளிகளிலும் நன்றாகப் படிக்க முடியும் என்ற சூழலை ஏற்படுத்த வேண்டுமேயொழிய, அதைத் தனியாரிடம் ஒப்படைப்பது தவறு. தற்போது அரசால் வகுக்கப்படும் கல்விக்கொள்கை என்பது, மேல்தட்டு மக்களின் நலன் சார்ந்ததாகவே உருவாக்கப் படுகிறது. அதனால்தான் அடித்தட்டு மக்களின் நலன்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல் இப்படியெல்லாம் முடிவெடுக்கிறார்கள்.

## இமையம்

*பள்ளி ஆசிரியர், எழுத்தாளர்*

ஏற்கெனவே தினக் கூலிகளின் குழந்தைகள் பள்ளிக் கூடங்களுக்கு வர இயலாத நிலை இருக்கிறது. வருகின்ற ஒன்றிரண்டு பேரையும் வராமல் செய்து விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது. நவோதயா பள்ளிகளை நடத்துகிற அரசாங்கம், கிராமப்புறப் பள்ளிகளை மட்டும் தனியார் வசம் ஒப்படைப்போம் என்றால், அரசு யாருக்குச் செலவழிக்க விரும்புகிறது என்பது தெளிவாக இருக்கிறது.

இது ஒரு நவீன தீண்டாமை. அரசின் கல்விக் கொள்கைகள் யாரையெல்லாம் வெளியே அனுப்பத் திட்டமிடுகிறது என்பதற்கு இன்று நம்மைக் கண்கலங்க வைத்திருக்கும் அனிதாவின் மரணமே உதாரணம்.

## மு. சிவகுருநாதன்

*பள்ளி ஆசிரியர், எழுத்தாளர்*

ஆசிரியர்கள் தரப்பிலும் தவறு இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. மலைப் பகுதிகளில் ஆசிரியர்கள் பள்ளிக்குச் செல்வதில்லை என்று கூறப்படுகிறது. ஆனால், அரசின் தற்போதைய நடவடிக்கை, ஆசிரியர்களின்மீது சாக்குப்போக்கு சொல்லி தனியார் மயத்தை நோக்கி படிப்படியாக அழைத்துச்செல்வது என்பது தான். பள்ளி களைக் கண்காணிக்க வேண்டியதும், தவறுகளைச் சரிசெய்ய வேண்டியதும் அரசின் பொறுப்பு. அதை எந்தக் காரணம் கொண்டும் அரசு தட்டிக் கழிக்க முடியாது!

# போட்டித் தேர்வுகள்கூட பன்னாட்டு நிறுவனங்களின் கொள்கைக்காக நடத்தப்படுகின்றன

## மருத்துவர் ஜி.ஆர். இரவீந்திரநாத்

மருத்துவப் படிப்பின்மீது மக்களுக்குப் பெரும் மோகம் உள்ளது. இந்தியாவில் மருத்துவம் தனியார் மயமானதும், வியாபாரமயமானதும், வருவாய் ஈட்டும் தொழிலாக மாறியதும், அரசுப் பணியுடன் தனியாகத் தொழில்செய்யும் வாய்ப்பும், ஓய்வுபெற்ற பின்னரும் வாழ்நாள் முழுவதும் வருவாய் ஈட்டலாம் என்ற நிலையும், அது வழங்கும் சமூக மரியாதையும், மருத்து வப் படிப்பில் சேர வேண்டும் என்ற ஆர்வத்தை அதி கரிக்கிறது. அதனால், மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்காதபோது, கடும் ஏமாற்றம் ஏற்படுகிறது.

வாழ்க்கைக்குப் பல்வேறு படிப்புகளும் அவசியம் என்ற மனநிலையை நமது கல்விமுறை உருவாக்கத் தவறிவிட்டது. மருத்துவப் படிப்பு மட்டுமே மிக உயரிய படிப்பு என்ற கருத்தாக்கம், மாணவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதியவைக்கப்பட்டுள்ளது. இதனால், மருத்துவப் படிப்புக்குக் கடும் போட்டி ஏற்பட்டுள் ளது. அப் படிப்பு மிக வேகமாகத் தனியார் மயமாக்கப் படுகிறது; வியாபாரமாக்கப்படுகிறது. இதுபோன்று உயர் கல்வி 70%க்கும் மேல் தனியார் மயமாகிவிட்டது. உயர்கல்வியில் சேரத் தகுதி உள்ள மாணவர்களில் 28%க்கும் குறைவானவர்களுக்கே உயர் கல்வி வாய்ப்பு கிட்டுகிறது.

சர்வதேச நிதி மூலதனம், உலக வங்கி போன்றவற்றின் நிர்ப்பந்தத்தால் மருத்துவமும் மருத்துவக் கல்வியும் இந்தியாவிலும் தனியார் மயமாக்கப்படுகின்றன. பெரு நிறுவனமயமாகின்றன. அதற்கு உதவும் வகையிலேயே தேசிய நலக்கொள்கை - 2017 இந்திய அரசால் உருவாக் கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, மருத்துவக் கல்லூரிகளைத் தனியார் தொழில் நிறுவனங்களும் தொடங்கலாம் என இந்திய மருத்துவக் கழகம் தனது விதிமுறைகளை மாற்றியுள் ளது. தனியார் நிறுவனங்கள் மருத்துவக் கல்லூரி களைத் தொடங்கிட, அரசு மருத்துவமனைகள் தாரை வார்க்கப்படுகின்றன. ஆந்திரத்திலும் குஜராத்திலும் இது நடக்கத் தொடங்கியுள்ளது.

### தனியார் மயமாகும் மருத்துவக் கல்வி

‘இந்திய மருத்துவக் கழகத்தை ஒழித்துவிட்டு,

அதற்குப் பதிலாக 'தேசிய மருத்துவ ஆணையம்' உருவாக்கப்பட உள்ளது. தற்போது மாநில அரசுகளின் கட்டண நிர்ணயக் குழுக்கள் தனியார் கல்லூரிகளின் 100% இடங்களுக்கும் கட்டணத்தை நிர்ணயிக்கின்றன. அதை ஒழித்துக்கட்டும் வேலையை மத்திய அரசு செய்துள்ளது. அதற்காக, தேசிய மருத்துவ ஆணைய மசோதாவில், 40%க்கும் குறைவான மருத்துவ இடங் களுக்கு மட்டுமே அரசால் கட்டணங்கள் நிர்ணயிக்கப் படும் எனக் கூறப்பட்டுள்ளது, அதிர்ச்சியளிக்கிறது.

ஏற்கெனவே, தனியார் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள், கட்டணங்களைச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். கேரளம் போன்ற மாநிலங்களில் இடங்களைத் திரும்ப ஒப்படைக்கின்றனர். நாடு முழுவதும் உள்ள தனியார் நிகர்நிலை மருத்துவக் கல்லூரிகளில் 5,200 எம்.பி.பி.எஸ். இடங்கள் 3.09.2017 வரை காலியாக இருந்தன. ஒருபுறம், மருத்துவ இடம் கிடைக்காததால் தற்கொலை, மறுபுறம், மருத்துவ இடங்கள் காலியாக இருக்கும் நிலை, கல்விக் கட்டணம் மிக அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். எனவே, குறைவாக உள்ள அரசு மருத்துவக் கல்வி இடங்களில் சேர, மிக அதிகமானோர் போட்டி போடுகின்றனர். இதனால், நீட் போன்ற தேர்வுகள் புகுத்தப்பட்டு, அனிதா போன்ற மாணவர்கள் வடிகட்டிப் புறந்தள்ளப்படுகின்றனர்.

இத்தகைய காரணங்களால் கல்வி, வேலை வாய்ப் புக்குக் கடுமையான போட்டி நிலவுகிறது. சான்றாக, புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியின் 200 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு 1 லட்சத்து 89 ஆயிரம் பேர் விண்ணப்பித்தனர். வேலை வாய்ப்பிலும் இதே நிலைதான். உத்திரப்பிரதேசத்தில் 368 அலுவலக உதவியாளர் வேலைக்கு 23 லட்சம் பேர் போட்டி யிட்டனர். அதில் 255 பேர் பி.ஹெச்.டி. முடித்தவர்கள். இத்தகைய நிலைமைகளே மருத்துவப் படிப்பை நோக்கி மாணவர்களைத் தள்ளுகின்றன. இந்நிலையில், மாநிலப் பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்களை யும், மாநில உரிமைகளையும், கூட்டாட்சிக் கோட் பாட்டையும் பாதிக்கும் வகையில், சமூக நீதிக்கும், இட ஒதுக்கீட்டுக்கும் எதிராக, மத்திய அரசு நீட் நுழைவுத் தேர்வைப் புகுத்தி உள்ளது.

### லாபம் காட்டும் தேர்வுத் தொழில்

தமிழக அரசின் ஒதுக்கீட்டு மருத்துவ இடங்களுக்கு, நீட்டிலிருந்து விலக்குக் கொடுக்க முடியாது என மத்திய அரசு பிடிவாதமாக இருக்கிறது. இதன் பின்னால் தேர்வுகளையே லாபம் ஈட்டும் தொழிலாக மாற்றும் அரசியல் உள்ளது. ஆண்டுதோறும், இந்தியா வில் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு நுழைவுத் தேர்வுகளை எழுதுகின்றனர். இத் தேர்வை தனியார் பெரு நிறுவனங்களே நடத்துகின்றன. நீட் தேர்வை புரோமெட்ரிக் என்ற அமெரிக்க நிறுவனம் நடத்தியது. மாணவர்கள் செலுத்திய கட்டணம் இந்நிறுவனத்துக்குச் சென்றது. நுழைவுத் தேர்வால் வரும் வருவாய் தங்களுக்கு வேண்டிய நிறு வனங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கில்தான், நீட்டிலிருந்து விலக்கு வழங்க இந்திய அரசு மறுக்கிறது.

இந்நிறுவனங்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைத் திடவே, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி, சித்தா போன்ற படிப்புகளுக்கும், பொறியியல் படிப்பு களுக்கும் நீட் நுழைவுத் தேர்வு கட்டாயம் என இந்திய அரசு அறிவித்துள்ளது. வெளிநாடுகளில் போய் மருத்துவம் படிக்க விரும்புபவர்களும் நீட் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்கிறது. மருத்துவப் படிப்பை முடித்து, பயிற்சி மருத்துவத்தையும் முடித்த உடன் 'நெக்ஸ்ட்' என்ற 'எக்ஸிட்' தேர்வை எழுத வேண்டும் எனக் கூறுகிறது. நீதிபதி நியமனத்துக்கும் தேர்வு கொண்டுவரப்படும் என்கிறது.

போட்டித் தேர்வுகளை நடத்துவதற்காகவே, 'தேசிய தேர்வு முகமை' என்ற அமைப்பை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பின் கீழ்ப் பன்னாட்டு நிறுவனங்களே போட்டித் தேர்வுகளை நடத்த உள்ளன. 'மேக் இன் இந்தியா' திட்டத்தைப் பற்றிப் பேசும் அரசு போட்டித் தேர்வுகளை நடத்துவதற்குக் கூட அமெரிக்க நிறுவனங்களைச் சார்ந்திருப்பது அவமானமல்லவா?

# நீட் விவகாரத்தில் தமிழகம் எந்தெந்த வகையிலெல்லாம் ஏமாற்றப்பட்டிருக்கிறது

**பிரின்ஸ் கஜேந்திர பாபு,** கல்வியாளர்

நீட் பிரச்சினையில் தமிழகம் எதிர்கொள்ள நேர்ந்த ஏமாற்றங்களைப் பட்டியலிட்டால், அனிதாவின் இழப்பின் வலி எந்த வகையது என முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

சென்னை செய்தியாளர்களின் சந்திப்பின்போது தமிழ்நாடு அரசு ஓராண்டு விலக்கு கோரினால், அது 'உரிய முறையில்' பரிசீலிக்கப்படும் என்று கூறினார் மத்திய வர்த்தகத் துறையின் அப்போதைய இணை யமைச்சர் நிர்மலா சீதாராமன். இது தமிழ் நாட்டில் மிகப் பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

மத்திய அரசு திடீரென்று தமிழ்நாட்டுக்கு விலக் களித்தால் பிற மாநிலங்களும் கேட்கும்; எனவே,

தமிழ்நாடு அரசு ஓர் ஆண்டுக்கு விலக்கு கோரி கொண்டுவரும் அவசரச் சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கும் பரிசீலனையில் மத்திய அரசு இல்லை என்று பிறகு கூறியது பெரும் அதிர்ச்சி அளித்தது. சட்டப்படி இத்தகைய காரணத்துக்காக விலக்கு அளிக்க இயலாது என்று மத்திய அரசு சொல்லவில்லை.

மாறாக, தமிழகத்துக்கு விலக்கு அளித்தால் பிற மாநிலங்களும் கேட்கும் என்றே காரணம் சொன்னது. இதை எவ்வாறு சட்டப்படி ஏற்க இயலும்? தமிழ் நாட்டுக்கு விலக்களித்தால் பிற மாநிலங்கள் கேட்கும் என்பது, ஓராண்டுக்கான அவசரச் சட்டம் எனில் பரிசீலிப்போம் என்று கூறியபோது நிர்மலா சீதாராமனுக்குத் தெரியாதா?

**இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் பங்கைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

நீட் மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடவடிக்கையைத் தமிழக அரசு உடனே தொடங்க உத்தரவிட வேண்டி 'நீட்' மனு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, இரண்டு தரப்பினருக்கும் பாதிப்பில்லாத ஒரு தீர்வுடன் வரும்படி உச்சநீதிமன்றம் அரசுக்கு ஆணை யிட்டது. ஆனால், அப்படி ஒரு தீர்வு எட்டப்பட வில்லை.

கடைசியில் நீட் தேர்வு அடிப்படையில் தமிழகத் தில் மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற வேண் டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக் கினால் பல மாதங்களாக அலைக்கழிக்கப்பட்ட மாணவர்களின் நிலையை உச்ச நீதிமன்றம் யோசித்துப் பார்த்திருக்க வேண்டுமல்லவா? சமூகத்தின் அடித் தட்டில் இருப்பவர்களைத் தானே தங்கள் தீர்ப்பு களின் முதன்மைப் பயனாளிகளாக நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்!

# அனிதாவின் ஈகம் குறித்து...

## தமிழ் இந்து நாளிதழின் ஆசிரியவுரை

மாநிலங்களில் கல்வி உரிமை மீதான நேரடியான தாக்குதலான இந்தப் புதிய (நீட்) நுழைவுத் தேர்வை ஆரம்பம் முதலாகவே தமிழகத்தைச் சேர்ந்த கல்வி யாளர்கள் பலரும் கடுமையாக விமர்சித்து வருகிறார் கள். இந்தப் புதிய நுழைவுத் தேர்வானது சமூக ரீதியாக வும் பொருளாதார ரீதியாகவும் அழுத்தப்பட்டிருக்கும் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களை எவ்வளவு மோச மாகப் பாதிக்கக்கூடியது என்பதையும் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்தார்கள். முதல்வர் பொறுப்பில் ஜெயலலிதா இருந்தவரை இந்த விஷயத்தில் ஓளரவுக் கேனும் ஓங்கி ஒலித்துவந்த தமிழகத்தின் உரிமைக் குரல், அவருடைய மறைவைத் தொடர்ந்து சுருதி இறங்கத் தொடங்கியது. தங்களுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எதையும் பறிகொடுப்பது எனும் பாதையை ஜெயலலிதாவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த அவருடைய கட்சியினர் தேர்ந்தெடுத்த பின் அதில் உடனடியாகச் சிக்கிக்கொள்பவர்களானார்கள் தமிழக மாணவர்கள்.

இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகள், மருத்துவர்களைக் கொண்ட மாநிலங்களில் ஒன்று தமிழகம். 'நாடு முழுவதற்கும் ஒரே தேர்வு' எனும் அடிப்படையில் கொண்டுவரப் படும் 'நீட்' மாதிரியான தேர்வுகள் எப்படியான குடமையான பாதிப்புகளை உண்டாக்கும் என்று ணர்ந்து தேசிய அளவில் இதை ஒரு விவகாரம் ஆக்கி யிருக்க வேண்டும் தமிழகம். ஆனால், மத்தியில் ஆளும் பாஜக அரசுக்கேற்றபடி தாங்கள் நடந்துகொள்வ தாலேயே தமிழகத்துக்கு 'தேர்வு விலக்கு' பெற்று விடலாம் என்று பகல் கனவு கண்டுகொண்டிருந்தனர் அதிமுக ஆட்சியாளர்கள்.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி இடையிலேயே 'நீட் தேர்வு' நடந்தது. தேர்வு முடிவுகள் வெளியாயின. பிளஸ் 2 தேர்வில் 1176/1200 மதிப்பெண்கள் பெற்றிருந்தவர் அனிதா. மருத்துவப் படிப்பில் சேர அவர் பெற்றிருந்த கட் ஆஃப் மதிப்பெண்கள் 196.75%. ஆனால், நீட் தேர்வில் அவர் பெற்ற மதிப்பெண்கள் 86/700. இப்படிப் பல மாணவ, மாணவிகள் மோசமான பாதிப்புக்குள்ளான செய்திகள் வெளியாயின. இது எதுவும் தமிழக ஆட்சியாளர்களை உலுக்கியதாகத் தெரியவில்லை. 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்துக்கு நிரந்தர விலக்கு கோரி தமிழக அரசு நிறைவேற்றிய இரண்டு மசோதாக்களும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டும், மத்திய ஆளும் பாஜக அரசு அவற்றைக் கிடப்பில் போட்டுவிட்டது. இடையில் குடியரசுத் தலைவர் தேர்தலில் தன்னுடைய வேட்பாளருக்கான ஆதரவை அதிமுக-விடம் அப் படியே வாங்கிக்கொண்டது பாஜக. அப்போதுகூட இந்த விஷயத்தை வலியுறுத்திப் பேசிக் காரியம் முடிக்கும் எண்ணம் அதிமுகவினரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. கடைசியில், நடப்புக் கல்வியாண்டுக்கு விலக்கு அளிக்க வகைசெய்யும் அவசரச் சட்டத்தின் வரைவை மத்திய அரசின் ஒப்புதலுக்குத் தமிழக அரசு அனுப்பி வைத்தது.

பொதுவெளியில், 'கண்டிப்பாக இந்த ஆண்டு விலக்கு பெற்றுத்தந்துவிடுவோம்' என்று மத்திய அமைச்சர்களை வைத்துப் பகிரங்கமாக உறுதி

மொழியளிக்கச் செய்துவிட்டு, அதற்கு நேர்மாறாக நீதிமன்றத்தில் நடந்துகொண்டது மத்திய அரசு. 'தமிழகத்துக்கு மட்டும் விலக்கு அளிப்பது தவறான முன்னுதாரணமாகிவிடும்' என்று நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவிக்க, 'இதனால் தமிழகத்துக்கு விலக்கு அளிக்க முடியாது' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. விளைவாக, உடனடியாக 'நீட் தேர்வு' முடிவுகள் அடிப்படையில் மருத்துவப் படிப்புக்கான இடங்களை நிரப்ப உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம். ஆக, இரண்டு அரசாங்கங்களும் மாற்றி மாற்றி அடுத்தவர் கோட்டுக்குப் பந்தை அடித்துக் கடைசியில் நொந்து நூலாகிப் போனார்கள் தமிழக மாணவர்களும் பெற்றோரும். இப்படிப்பட்ட பின்னணியில்தான் அனிதாவின் மரணம் நடந்திருக்கிறது. எதற்குமே தற்கொலை தீர்வில்லை. தற்கொலை என்பது மிக மிகத் தவறான முடிவு. ஆனால், "அனிதாவை அந்த முடிவை நோக்கித் தள்ளியதில் மத்திய, மாநில அரசுகளுக்கு முழுப் பொறுப்பு இருக்கிறது" என்று அவருடைய குடும்பத்தினர் குற்றம்சாட்டினால், அந்த உண்மையை எப்படி இரு அரசுகளாலும் தார்மிக ரீதியாக மறுக்க முடியும்? பிளஸ் 2 தேர்வு முடிந்ததில் தொடங்கி தமிழகத்தில் மருத்துவக் கல்விக் கனவிலிருந்த மாணவர்களும் பெற்றோர்களும் கடந்த ஐந்து மாதங்களாக எப்படி அலைக்கழிக்கப்பட்டார்கள் என்பதை அவர்களுடைய தரப்பில் அமர்ந்து பார்த்தால்தான் உணர முடியும்.

அதிகாரப் போட்டியே வேலை என்றாகிவிட்டால், பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஓடுவது ஒன்றே இலக்காகிவிடும் என்பதையே முதல்வர் பழனிசாமி இனியாகிலும் உணர வேண்டும். மாநிலத்தில் உள்ள பலம் மட்டும் இன்றி, மக்களவையிலும் 37 உறுப்பினர்களுடன் நாட்டின் மூன்றாவது பெரிய கட்சியாக அமர்ந்திருந்தும் 'நீட் விவகார'த்தில் தமிழக அரசுக்கு எற்பட்ட பின்னடைவானது அதிமுகவின் அரசியல் தோல்வியின் விளைவே தவிர வேறு அல்ல. அதிமுகவுக்குள் நடந்துவரும் அதிகார யுத்தத்தில் தமிழகம் இன்னும் எத்தனையெத்தனை உயிரோட்டமான விஷயங்களைப் பலிகொடுக்க வேண்டியிருக்குமோ என்ற அச்சமே ஏற்படுகிறது. ஒன்று திறமையாக ஆளுங்கள் அல்லது விலகுங்கள். மாநில உரிமைகளை உங்களுடைய சுயநலனுக்காகப் பறிகொடுக்காதீர்கள்.

ஒரு அனிதாவை இனி என்ன கொடுத்துப் பெற முடியும் தமிழகம்!

## தினமணி நாளிதழின் ஆசிரியவுரை

'நீட்' என்கிற தகுதியான தேர்வு மட்டுமே மருத்துவப் படிப்புக்கு அடிப்படை என்று சொன்னால் அப்போது பன்னிரெண்டு ஆண்டுகள் ஒரு மாணவன் பள்ளியில் படிக்க வேண்டிய அவசியம்தான் என்ன? 'நீட்' தேர்வு என்பது பள்ளிகளை முக்கியத்துவம் இல்லாமல் செய்து, தனியார் பயிற்சி மையங்களை ஊக்குவிப்பதாக அமைந்துவிடும்.

## பிற பதிவுகள்....

### ❖ யாராவது கூடிவிடுவார்களோ?

நேற்று இரவு பன்னிரண்டு மணி இருக்கும், சென்னை கடற்கரைச் சாலையில் சுற்றினேன். வழக்கத்துக்கு மாறான போலீஸ் குவியல், கடற்கரை உட்புறச் சாலையின் ஒவ்வொரு முகப்பிலும் குவிக்கப்பட்டிருந்தது. மற்றொருபுறம் அவ்வை சண்முகம் சாலை (நடுக்குப்பம் மீன் மார்க்கெட்), பாரதி சாலை உள்ளிட்ட பகுதிகளில் இளைஞர்கள் எதிரணியைப்போல குழுகுழுவாய்க் கூடியிருந்தனர். எப்போதும் குல்ஃபிக்கு கூடும் கூட்டமல்ல அது என்பது பார்த்ததுமே புரிந்தது. யாராவது கூடிவிடுவார்களோ என்கிற அரசின் பதற்றமும் காவல்துறையின் குவிப்பின் வழியாகவோ, யாராவது முன்வந்து கூடி ஒரு போராட்டம் நடத்த மாட்டார்களா என்கிற ஆற்றாமையுடனான ஆதங்கத்தை குழுகுழுவாய்த் திரண்டிருந்த இளைஞர்களின் மூலமும் அறிய முடிகிறது. ஜல்லிக்கட்டு போராட்டத்துக்குப் பிறகு இப்படியொரு நிலைமை உருவாகியிருப்பது கொஞ்சம் ஆறுதலான விஷயமாகக் கொள்ளலாம். அரசியலற்ற அரசியலாகச் செயல்படும் இந்த இளைஞர்களை ஒருங்கிணைப்பது முக்கியமானது.

*பழனி ஷஹான், பதிவர்*

### ❖ எது மெரிட்?

*வீட்டில் தனி அறை இல்லை!*

*குளிர்சாதன வசதி, மின் விசிறி இல்லை!*

*கைப்பேசி இல்லை!*

*பத்து நாள் அலுவலகத்துக்கு விடுமுறை எடுத்துக் கொண்டு மகளுடன் கூடவே இருந்து சொல்லித் தரும் தகுதியும் வசதியும் பெற்ற அம்மா அப்பா இல்லை!*

*கண்விழித்துப் படிக்கும்போது*

*பக்கத்தில் 'பிளாஸ்க் காபி' இல்லை!*

*'அந்தக் காலத்துல நாங்க கவர்ன்மெண்டு சர்வீஸ்ல இருக்கும்போது யூ நோ' என்று சொல்லும் தாத்தா இல்லை.*

*அமெரிக்காவில் ஐடியில் டாலர் சம்பளம் வாங்கி ஆண்டுக்கொரு முறை வீட்டுக்கு வரும் ரே-பான் கண்ணாடி மாமா இல்லை!*

*ஒரு நேரத்துக்கு 500, 1,000 வாங்கும் டியூஷன் டீச்சர் இல்லை!*

*வார இறுதி சினிமா, ஹோட்டல் இல்லை!*

*விடுமுறைக்குச் செல்ல ஊர் இல்லை!*

*இருந்தாலும் 1176! இதுதான் அனிதா!*

*இதுதாண்டா மெரிட்டு!*

*விஜயசங்கர் ராமச்சந்திரன்,*
*மூத்த பத்திரிக்கையாளர்*

# தமிழ்நாட்டுக் கல்வியின் எல்லை தமிழ்நாட்டு அரசுக்கு அல்லாமல் வேறெந்த அரசுக்கும் இல்லை!

**அரி பரந்தாமன்**
மேனாள் நடுவர், சென்னை உயர்நீதிமன்றம்

இந்தியா பல மாநிலங்களின் ஒன்றியம். அம் மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு. ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் சட்டமியற்றும் அதிகார எல்லைகளை அரசமைப்புச் சட்டம் வரையறுக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணை யின் முதல் பட்டியலில் (ஒன்றிய பட்டியல்) வரிசையிட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளவை சம்மந்தமாக ஒன்றிய அரசுக்கு மட்டுமே சட்டம் இயற்றும் அதிகாரம் உண்டு.

இரண்டாம் பட்டியலில் (மாநில பட்டியல்) குறிப்பிட்டுள்ளவை சம்மந்தமாக மாநில அரசுக்கு மட்டுமே சட்டமியற்றும் அதிகாரம் உண்டு.

மூன்றாவது பட்டியலில் (ஒத்திசைவுப் பட்டியல்) குறிப்பிட்டுள்ளவை தொடர்பாக, ஒன்றிய அரசும் சட்டமியற்றலாம், மாநில அரசும் சட்டமியற்றலாம்.

மூன்றாவது பட்டியலை ஒத்திசைவுப் பட்டியல் (concurrent list) என்று குறிப்பிடுவதே சரியானது. பொதுப்பட்டியலை (General / common list) என்று குறிப்பிடுவது சரியல்ல.

கல்வி என்பது ஒத்திசைவுப்பட்டியலில் வரிசை எண் 25ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட போது, "கல்வி" இரண்டாம் பட்டியலில் (மாநில பட்டியலில்) இருந்தது. அவசரநிலை காலத்தில், 1976ல் அரசமைப்புச் சட்டத்திற்குச் செய்யப்பட்ட 42 ஆவது திருத்தத்தின் மூலம், "கல்வி" ஒத்திசைவுப் பட்டியலுக்குக் (மூன்றாவது பட்டியல்), கடத்தப்பட்டது. இது மாநில உரிமைகளைப் பறித்தது.

"கல்வி", மாநிலப்பட்டியலில் இருக்குமானால், மருத்துவக் கல்வியில் மாணவர் சேர்க்கை சம்மந்தமாக, இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்விற்கான (NEET-ற்கான) சட்டத்தை ஒன்றிய அரசு போடவே முடியாது.

இப்போது, ஒத்திசைவுப் பட்டியலில் "கல்வி" இருப்பதால், ஒன்றிய அரசும் NEET போன்ற சட்டமியற்ற அதிகாரம் உள்ளது.

ஆனால், அவ்வகையில் இயற்றும்போது, மாநிலங்களின் ஒத்திசைவுடன் அச்சட்டம் இருக்கவேண்டும். எந்த ஒரு மாநிலமும், தங்களின் மாநிலத்திற்கு ஒன்றிய அரசின் சட்டத்திலிருந்து விலக்கு பெறவும், அம்மாநிலம் அவர்களுக்கென்று தனியான சட்டம் போடவும் முடியும். இதுவே அரசமைப்பு கூறும் கூட்டாட்சித் தத்துவம்.

சுகாதாரத்துறை சம்மந்தமாக அமைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட பாராளுமன்ற நிலைக்குழு, பாராளுமன்றத்திற்கு 08.03.2016 இல் அறிக்கை சமர்ப்பித்தது. இது 92வது பாராளுமன்ற குழு அறிக்கை ஆகும். இதில், மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு, இந்திய அளவில் நுழைவுத் தேர்வு நடத்தலாம் என்றும், எந்தெந்த மாநிலங்கள் இந்திய அளவில் நடத்தப்படும் நுழைவு தேர்விற்கு விலக்கு கேட்கிறதோ, அம்மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படவேண்டும் என்றும் தெளிவாகக் கூறுகிறது.

மத்தியபிரதேச மாநில அரசுக்கு, அம்மாநிலத்தில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை சம்மந்தமாக சட்டமியற்றும் அதிகாரமுண்டா என்ற கேள்வி எழுந்தபோது, உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு 02.05.2016-இல் Modern Dental College வழக்கில் அளித்த தீர்ப்பில், மாநில அரசின் உரிமைகளை உறுதி செய்துள்ளது.

ஒன்றிய அரசினால் நடத்தப்படும் நிறுவனங்கள் தவிர்த்து (IIT, NIT, ஜிப்மர், AIMS போன்றவை) அந்த மாநிலத்தில் உள்ள கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை பற்றி தீர்மானிக்க உரிய அரசு, மாநில அரசே என்று தெளிவாகக் கூறியுள்ளது.

*இவற்றை எல்லாம் கணக்கில் கொண்டுதான், 12.05.2016 அன்று பாளையங்கோட்டையில் மாநில தேர்தல் கூட்டத்தில் பேசிய மறைந்த முதல்வர் ஜெயலலிதா அவர்கள், தமிழக மருத்துவ மாணவர் சேர்க்கை எந்த நுழைவுத் தேர்வின் அடிப்படையிலும் நடைபெறாது. தேவைப்பட்டால் இதற்கான சட்டத்தை மாநில அரசு இயற்றும் என்றார்.*

*இதனடிப்படையில்தான், ஒன்றிய அரசு இந்தியா முழுவதற்கும் பொது நுழைவுத்தேர்வு (NEET) என்று சட்டம் கொண்டு வந்தபோது, அதற்கு விலக்கு கேட்டு 01.02.2017ல் தமிழக சட்டமன்றம் ஏகமனதாகச் சட்டமியற்றி, மத்திய அரசின் ஒத்திசைவுக்கு அனுப்பியது.*

*"மிருகவதை" சம்மந்தமாகச் சட்டம் இயற்றும் அதிகாரம் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளதால், ஜல்லிக்கட்டு என்பது மிருகவதை அல்ல என்று 23.01.2017ல் தமிழக சட்டமன்றம் ஒருமனதாகச் சட்டமியற்றி, தமிழ்நாட்டில் மட்டும் காளைக்கு விடுதலை பெறும் வகையில் செய்தபோது, தமிழ் மக்களின் பேரெழுச்சியினால் ஒன்றிய அரசு உடனே அச்சட்டத்திற்கு ஒத்திசைவு அளித்தது.*

*ஆனால், 23.01.2017-இல் இயற்றிய சட்டத்திற்கு ஒத்திசைவு அளித்த ஒன்றிய அரசு, ஒரு வாரம் கழித்து 01.02.2017ல், NEET - ற்கு விலக்கு அளிக்க நிறைவேற்றிய சட்டத்திற்கு ஒத்திசைவு அளிக்க மறுப்பது ஏன்?*

*ஒத்திசைவை ஒன்றிய அரசு அளித்திருக்குமானால், +2ல் இயற்பியலில் 200/200, வேதியியலில் 198/200, உயிரியலில் 194/200 மதிப்பெண்கள் எடுத்த அரியலூர் ஏழை மாணவி அனிதா, அரசின் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருப்பார். அவரின் மருத்துவர் கனவு நினைவாகி இருக்கும். அவர், உயிர் ஈகம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டார்.*

*மாணவி அனிதாவிற்குக் கிடைக்கும் நியாயம் என்பது, 01.02.2017ல் தமிழ்நாடு சட்டமன்றம் இயற்றிய "அனிதா சட்டத்திற்கு" ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறும்வரை அனைத்துத் தரப்பு தமிழ்மக்களும் இணைந்து போராடுவதே ஆகும்.*

# 'நீட்' தேர்வினால் [அனிதாபோன்று] மருத்துவக் கனவை இழந்த அரசுப்பள்ளி மாணவிகள்

ஏழை எளிய சிற்றூர்ப்புற மாணவர்களின் மருத்துவக் கனவில் மண்ணை அள்ளிப் போட்டுள்ள ஆளும் அரசுகளால் கொண்டுவரப்பட 'நீட்' என்ற ஒரு கொடிய தேர்வினால் (புதுக் கோட்டை மாவட்டம்) ஆலங்குடி அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் படித்து உயிரியலில் 200/200 மற்றும் கணிதத்தில் 200/200 பெற்றுள்ளதோடு மருத்துவக் (கட்-ஆப்) 197.25 மதிப்பெண்கள் பெற்று மருத்துவக் கனவை இழந்துள்ளார் புவனேஸ்வரி என்னும் மாணவி.

அதே அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் பயின்று 197 மருத்துவக் (கட்-ஆப்) மதிப்பெண் பெற்று தனது மருத்துவக் கனவையும் இழந்துள்ளார் இன்னொரு மாணவி செயப்பிரியா. தற்போது கலை அறிவியல் கல்லூரியில் இளநிலை கணிதம் (B.Sc.) படிப்பதற்காகச் சேர்ந்திருக்கிறார்கள்.

எங்களது மாணவிகளான த.புவனேசுவரி, மு.செயப்பிரியா போன்று அரசுப்பள்ளியில் பயின்ற எத்தனையோ ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள், 'நீட்' என்ற கொடிய தேர்வினால் தங்களது எதிர்கால நோக்கமான மருத்துவக் கனவை இழந்து மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகித் தத்தளித்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதை அன்றாடம் பார்க்கிற பொழுது பெருந்துயரமாக இருக்கிறது.

ஆகவே, அரியலூர் மாணவி அனிதா போன்று மற்ற மாணவர் களையும் இழந்துவிடக்கூடாது என்ற உயரிய நோக்கோடு கிராமப்புற மாணவர்களின் நலனறிந்து ஆளும் அரசுகள் செயல்பட வேண்டும் என்பதே தமிழ்நாடு முழுவதும் புவனேசுவரி, செயப்பிரியா போன்ற எத்தனையோ மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கையாக உள்ளது.....!!!



த. புவனேஸ்வரி



மு. செயப்பிரியா

"மக்களின் நலன் அறிந்து செயல்படுவதே நலம் நாடும் அரசு"

அரசுப்பள்ளியில் பயின்ற எத்தனையோ ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைக் கலைக்கும் "நீட் " என்னும் ஒரு கொடுந் தேர்வு தமிழ் நாட்டுக்குத் தேவையில்லை.

*பின்குறிப்பு : மாணவி புவனேசுவரியின் பெற்றோர் தமிழ்ச்செல்வன் - கனகாம்பாள்.*

அடுத்து,

மாணவி செயப்பிரியாவின் பெற்றோர் முத்து-சாந்தி. தந்தை 10 ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டார். இவரின் தாயார் உடல்நிலை சரியில்லாதவர் .இவருக்கு ஒரு தங்கை இருக்கிறார். இவர்களின் குடும்பம் மிக ஏழ்மை நிலையில் உள்ளது. ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள். குடும்ப வருமானத்திற்குச் செயப்பிரியாவின் தாயார் ஆலங்குடியில் வீடு வீடாகச் சென்று சோப்புப் பவுடர், பினாயில் போன்றவை விற்று மிகவும் குறைந்த வருவாயில் தொல்லைப்படுகிறார்.

*செய்திப்பதிவு:*
*ஆசிரியர் சி. சசிக்குமார்*

# தமிழ்நாட்டிற்கே கல்வி உரிமை

**கண. குறிஞ்சி**
நெறியாளர் - தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணை, அதிகாரப் பகிர்வு பற்றிக் குறிப்பிடுகிறது. அதன்படி ஒன்றியப் பட்டியல், ( Union list) பொதுப் பட்டியல் (Concurrent list) மாநிலப் பட்டியல் (State list) என அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 245 மற்றும் 246 ஆவது பிரிவுகள் மைய மற்றும் மாநில அரசுகள், சட்டம் இயற்றும் முறை குறித்து விளக்குகின்றன.

"இந்தியாவின் அனைத்துப் பகுதிக்கும் தேவையான சட்டங்களை இயற்ற நாடாளுமன்றத்திற்கு உரிமை உண்டு. அதே போல், மாநிலம் முழுவதற்கும் தேவையான சட்டங்களை இயற்ற மாநில அரசுக்கு உரிமை உண்டு" எனச் சட்டப் பிரிவு 245 குறிப்பிடுகிறது.

அதன்படி, மைய அரசிற்கு ஏறக்குறைய 100 அதிகாரப் பிரிவுகள் உள்ளன. இது " ஒன்றியப் பட்டியல் " (மையப் பட்டியல்) எனப்படுகிறது. பாதுகாப்பு, முப்படை, வெளிநாட்டு உறவு, நாணயம், அணுசக்தி, தொடர் வண்டி, நெடுஞ்சாலை, அஞ்சல், காப்பீடு, கடல் சார்நிறுவனங்கள், வங்கிகள், தொல்லியல் ஆய்வு, அயல் நாட்டு ஒப்பந்தங்கள் போன்ற அதிகாரங்கள் இந்த ஒன்றியப் பட்டியலில் உள்ளன. , மைய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டு அரசுகளுக்கும் பொதுவாக ஏறத்தாழ 57 அதிகாரப் பிரிவுகள் உள்ளன. கல்வி, காடுகள், குற்றவியல் சட்டங்கள், குடும்பக் கட்டுப்பாடு, மக்கள் தொகை, விலைவாசி, தொழில் மற்றும் வணிகம் போன்றவை அடங்கியுள்ள இப்பிரிவு "பொதுப் பட்டியல்" எனப்படுகிறது. இவை தவிர, 61 அதிகாரப் பிரிவுகளைக் கொண்ட, முற்றிலும் மாநில அதிகார வரம்பிற்குட்பட்ட, "மாநிலப் பட்டியல்" தனியே உள்ளது. சட்டம் ஒழுங்கு, காவல் துறை, சிறை, பொது சுகாதாரம், மது, நூலகம், விவசாயம் மீன்வளம் திரையரங்கு தொழிற்சாலைகள் போன்ற அதிகாரங்கள் இதில் உள்ளன.

நாடு விடுதலை அடைந்த பிறகு, மையத்தில் ஆள்வது காங்கிரசாக இருந்தாலும், பாரதிய ஜனதா கட்சியாக இருந்தாலும், அதிகாரங்களைத் தம்மிடம் குவிப்பதிலேயே கருத்தாக இருந்து வருகின்றன. எனவே மாநில அரசுகளிடம் உள்ள அதிகாரத்தைப் பொதுப் பட்டியலுக்கு மாற்றுவதிலேயே குறியாக உள்ளன. பொதுப் பட்டியலிலிருந்து பிறகு மையப் பட்டியலுக்குக் கமுக்கமாக மாற்றிக் கொள்வது என்பது அவர்களது திட்டமாக உள்ளது.

கல்வி என்பது முதலில் மாநில அரசிற்குரிய பட்டியலில்தான் இருந்தது. ஆனால் இந்தியாவின் நெருக்கடி கால கட்டத்தில் ( ஜூன் 25/1975 முதல் மார்ச் 21/1977 வரை ) அரசியல் சாசனத்தில் 42ஆவது திருத்தத்தை இந்திரா காந்தி கொண்டு வந்தார். அதன்படி மகன் சஞ்சய் காந்திக்குப் பிடித்தமான மக்கள் தொகை / குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகச் செயலாக்க அவற்றை மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றினார். அதே சமயத்தில், மாநில அரசின் அதிகாரத்திலிருந்த கல்வியை, மையஅரசின் அதிகாரம் மேலோங்கியுள்ள, பொதுப் பட்டியலுக்கு எளிதாக மாற்றி விட்டார். சனநாயகத்திற்கு எதிரான இப்படிப்பட்ட பல்வேறு மாற்றங்களை 42 ஆவது திருத்தத்தின் மூலம் அவர் கொண்டு வந்ததால், இந்தியச் சட்ட வரலாற்றிலேயே மிகவும் சர்ச்சைக்குரியதாக அத்திருத்தம் கருதப்பட்டது.

கல்வி, மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாறியதால், கல்வியின் மீதான ஆளுமை

இயல்பாக மைய அரசுக்குக் கிடைத்து விட்டது. மைய அரசுக்கு வாய்ப்பான கல்வி மாற்றங்கள், இந்தித் திணிப்பு போன்றவற்றைப் புகுத்த இது உதவியது. அந்த அடிப்படையில்தான் இப்பொழுது "நீட்" தேர்வு திணிக்கப்பட்டுள்ளது.

மைய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டு அரசுகளுக்கும் பொதுப் பட்டியலில் உரிமை இருந்தாலும், மைய அரசின் அதிகாரமே அங்கு மேலோங்கி உள்ளது. மாநில அரசு நிறைவேற்றி அனுப்பும் சட்டம், மைய அரசின் நிலைப்பாட்டிற்கு எதிராக இருந்தால், நாடாளுமன்றத்தின் மூலம் அத்தீர்மானத்தை முறியடிக்கும் உரிமை, 254 ஆவது சட்டப் பிரிவின்படி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மாநில அரசு, தான் இயற்றிய சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று விட்டால், அச் சட்டத்தை மாநிலத்தில் நடைமுறைப்படுத்த முடியும் என 254 (2) ஆம் பிரிவு வகை செய்கிறது.

அதனால்தான், நீட்டிற்கு எதிரான சட்டத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, தமிழ்நாடு அரசு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தது. ஆனால், இந்துத்துவ அரசு அதை மூலையில் தூக்கி வீசிவிட்டது.

எனவே, இப்பொழுதுள்ள சூழ்நிலையில் "நீட்" நுழைவுத் தேர்வை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமானால், கல்வியைப் பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவது ஒன்றுதான் நமக்கு முன்னுள்ள ஒரே வாய்ப்பாகும். இதுவே நிரந்தரத் தீர்வாகவும் இருக்கும். ஓராண்டிற்கு விலக்கு, இரண்டாண்டு விலக்கு என்பதெல்லாம் தமிழக மாணவர்களை ஏமாற்றும் செயலாகும்.

மேலும், நாடாளுமன்றத்தின் நிலைக்குழு, "நீட்" நுழைவுத் தேர்வை ஏற்காத மாநிலங்களுக்கு விலக்குக் கொடுக்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளது.

தவிரவும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 15 (கி) -க்கு 1952 ஆம் ஆண்டு கொண்டு வந்த திருத்தத்தின் படி, சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பட்டியலினப் பழங்குடியினரது முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் மாநில அரசின் சிறப்பு ஏற்பாடு எதனையும் யாராலும் தடுக்க முடியாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில், தமிழ்நாட்டு மாணவர்களின் உரிமையைத் தடுக்கச் சட்ட ரீதியாகத் தடை ஏதும் இல்லை.

கல்வி வணிகமயமாக்கப்படல், தாய்மொழி வழிக் கல்வி, அண்மைப் பள்ளி, பொதுப் பள்ளி, அனைவருக்கும் தரமான இலவயக் கல்வி போன்ற பல்வேறு சிக்கல்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றைச் செயல்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமாகும். ஆனால் இன்று " நீட்" தேர்வு எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அனிதாவை அநியாயமாக " நீட் " தேர்வு பலி வாங்கி உள்ளது. இதற்கு நியாயம் கேட்டு மாணவர்கள் வீதியில் இறங்கி அணி அணியாகப் போராடி வருகின்றனர். எனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழகத்தின் கல்வி உரிமையை மீட்டெடுக்க வேண்டியது நமது கடமையாக மாறிவிட்டது.

மிக மிக அரிதான ஒரு வாய்ப்பை வரலாறு இப்பொழுது வழங்கியுள்ளது. தமிழக மாணவர்கள் ஒருக்காலும் இதை நழுவ விடக் கூடாது. எல்லாவித ஆற்றல்களையும் ஒருங்கிணைத்து, போராட்டத்தை ஊழித் தீயாக மாற்றி, வெற்றிக்கனியைப் பறித்திட வேண்டும். ஒற்றுமை, ஒற்றுமை - அது ஒன்றே நமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். தமிழ் நாட்டிற்கே கல்வி உரிமை என்பதை மெய் நடப்பாக மாற்றி அமைத்திட வேண்டும்.

●



# நீட் தேர்வு சில விளக்கங்கள்

**அ. தருமசேகர்**
அரசுப்பள்ளி ஆசிரியர்

**'நீட்'** எனப்படும் தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு, மருத்துவக் கல்லூரிக்கான நுழைவுத்தேர்வாக இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது மாநில உரிமைகளை நசுக்குவதுடன், ஒடுக்கப் பட்ட மக்களின் கல்வி உரிமையையும் பறிக்கும் முடிவாகும்.

2013ஆம் ஆண்டு நீட் தேர்வு தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி திரு.அல்டாமஸ் கபீர் தலைமையில் 3 நீதிபதிகள் விசாரணை செய்தனர். இருவர் நீட் தேர்வு தேவையில்லை என்றும், ஒருவர் (அனில் R. தவே) தேவை என்றும் தீர்ப்பு எழுதினர். பெரும்பான்மைத் தீர்ப்பு என்ற அடிப்படையில் நீட் தேர்வு தேவையில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு அனில் தவே என்ற குஜராத்தி பார்ப்பனர் தலைமையில் மீண்டும் நீட் தேர்வு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 2016ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுமைக்கும் நீட் கட்டாயம் என்று தீர்ப்பு திணிக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு ஓராண்டிற்கு விதி விலக்கும் பின்னாளில் வழங்கப்பட்டது.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது - சட்டத்தின்படி இல்லாது நீதிபதிகளின் மனநிலைப்படி தீர்ப்பளிக்கப்பட்டது வெளிப்படை.

இந்தியா ஒரு நாடல்ல. பல நாடுகளைக் கொண்ட ஒரு துணைக்கண்டம். பல மொழிகள், பல கலாச்சாரங்கள், பல்வேறு பாடத்திட்டங்கள் உள்ள நிலையில் சி.பி.எஸ்.இ பாடத்திட்ட அடிப்படையில் வினாத்தாள் தயாரித்ததும் தேர்வினை அந்தக் கல்வி நிறுவனமே நடத்தியதும் முறையற்ற செயல்.

தான் படிக்காத பாடத்திட்டத்தில் தேர்வு எழுதும் மாணவர்கள் - தான்படித்த பாடத்திட்டத்தில் தேர்வு எழுதும் மாணவர்களோடு எப்படிப் போட்டி போட முடியும்? இது வஞ்சனை - மோசடி அல்லவா?

நீரில் நன்றாக நீந்தி வாழும் ஒரு மீனை நிலத்தில் வாழும் உயிரினங்களோடு வாழ வேண்டும் என்று கட்டளையிடுவது முறைதானா? பாமரனுக்கும் விளங்கும் இவைபோன்ற செய்திகள் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு விளங்காமல் போனது ஏன்?

1925ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக்கல்லூரியில் சேர்வதற்குச் சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டது. பனகல் அரசர் முதல்வராக இருந்தபோது (நீதிக்கட்சி) இந்தச் சட்டம் நீக்கப்பட்டது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

தற்போது ஒடுக்கப்பட்ட மாணவர்களின் மருத்துவக்கனவை அழிக்க மீண்டும் 'நீட்' என்ற போர்வையில் 'குலக்கல்வித்திட்டம்' நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நீட் தேர்வைக் கொண்டு வர உச்சநீதிமன்ற பார்ப்பன நீதிபதிகள் கூறிய காரணங்களும் - அதற்கான விளக்கமும்.

**1. மாணவர்கள் பல்வேறு நுழைவுத் தேர்வுகளை எழுத வேண்டியுள்ளது:**

நீட் நடைமுறைக்கு வந்தபின்பும் AIMS, JIPMER போன்றவை தனித்தனியே நுழைவுத் தேர்வை நடத்துகின்றன. உச்சநீதிமன்றம் அவற்றை எப்படி அனுமதிக்கிறது? தமிழ்நாட்டிற்கு மட்டும் ஒரு நீதியா?

**2. தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுக்கத்தான் நீட் தேர்வு நடைபெறுகிறது:**

தமிழ்நாட்டு அரசு தன் கட்டுப்பாட்டில் உள்ள 24

அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கும், சுயநிதி மருத்துவக்கல்லூரிகளின் அரசு ஒதுக்கீட்டு இடத்திற்கும் ஒற்றைச் சாளர முறையில் 'கட் ஆப்' மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடத்துகிறது.

200 மதிப்பெண்களுக்குப் பிசி-196, எம்பிசி-195.75, எஸ்சி-195 என்ற மதிப்பெண்களுக்கு மேல் எடுத்த மாணவர்களே அரசுக் கல்லூரிகளில் இடம்பெறமுடிகிறது. இதில் தகுதி குறைவு என்பது எதை வைத்து நிர்ணயம் செய்யப்படுகிறது?

**3. குறைந்த மதிப்பெண் பெற்றவர்கள் பணத்தைக்கொட்டி இடம் பெறுகிறார்கள்:**

ஒரு நிகர்நிலைப் பல்கலைக் கழகத்திலோ, சுயநிதிக் கல்லூரியிலோ ஓர் இடத்திற்கு 50 இலட்சம் நன்கொடையும், ஆண்டுக்கு 8 இலட்சம் என 5 ஆண்டுகளுக்கு 40 இலட்சம் என மொத்தம் 90 இலட்சம் செலுத்திப் படித்தது உண்மைதான். தற்போது 2016, 2017 இல் நீட் மதிப்பெண் அடிப்படையில் அரசு அனுமதிக்கும் தொகை ஆண்டிற்கு 22 இலட்சம் 5 ஆண்டுகளுக்கு 1 கோடியே 10 இலட்சம். இதில் யாருக்கு இலாபம்? உச்சநீதிமன்றம் இந்த வசூலை சரிசெய்ய முடியவில்லையே ஏன்? எண்ணெய் செலவுதான் பிள்ளை பிழைத்தபாடில்லை.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அரசுக் கல்லூரிகளில் இடம் கொடுக்கத்தானா? இதற்கெல்லாம் என்ன காரணம்?

இந்தியாவிலேயே அதிகமான அரசு மருத்துவக் கல்லூரிகளை (24) கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான். முதுநிலைப் படிப்புகளுக்கும், உயர் மருத்துவப் படிப்புகளுக்கும் அதிக இடங்களைப் பெற்றுள்ளதும் தமிழ்நாடுதான்.

கல்வியில் மட்டுமன்றி, உள்கட்டமைப்பு வசதிகளும், தமிழ்நாட்டில் மிகச்சிறந்த முறையில் உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்நாட்டில்தான் 69% இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது.

**இதனை ஒழித்துக்கட்டத்தான் இந்த 'நீட்' தேர்வு, கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்த கதைபோல மாநில பாடத்திட்ட மாணவர்களுக்கான இடத்தில் மத்திய பாடத்திட்ட மாணவர்கள் நுழையச் செய்த சதியே இந்த நீட் தேர்வு.**

எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. தமிழ்நாடு மட்டும் எதிர்ப்பது ஏன்? என்ற சொத்தை வாதத்தை வைக்கிறார்கள்.

தெலுங்கானா, ஆந்திரா, காஷ்மீர் மாநிலங்களுக்கு 'நீட்' தேர்வில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு ஏன் தரவில்லை?

"இந்தியாவிலேயே சமூக நீதியின் பிறப்பிடமாக தமிழ்நாடுதான் இருக்கிறது" என்றார் மண்டல் குழுவின் தலைவர் பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல். தந்தை பெரியார், சமூக நீதியை உரமாக்கி வளர்த்த - வளர்ந்து வருகின்ற மண். எனவே சமூக அநீதிக்கு எதிரான முதல் குரல் தமிழ்நாட்டிலிருந்துதான் எழும்.

1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின்போது மாநிலப்பட்டியலில் இருந்த கல்வி நடுவண் அரசின் பொதுப்பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. பறித்துக்கொண்டது. நமது பண்பாட்டிற்கு ஏற்ற, பாடப்பொருள், பாடத்திட்டத்தை நாம் முடிவெடுக்க முடியாத நிலையில் உள்ளோம். கலந்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டிய இந்திய அரசு (இதைத்தான் படிக்க வேண்டும்) என்று நம்மைக் கட்டாயப் படுத்துகிறது.

1985, 2016 ஆண்டுகளில் புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் வடிவம் மாற்றப்பட்டு இந்தி, சமற்கிருதம் திணிப்பதற்கும், தமிழர்கலாச்சாரங்களை அழிப்பதற்கும், ஆரியக் கலாச்சாரங்களைப் புகுத்துவதற்கும் வழிவகைகளைச் செய்கின்றன.

இதற்கான தீர்வு கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவருவதுதான். அதிகாரங்களைக் குவித்து வைத்துக்கொண்டு சர்வாதிகாரப் போக்குடன் செயல்படும் இந்திய அரசிடம் இருந்து நமது உரிமைகளை நாமே பறித்தாக வேண்டும்.

அதற்கான விதையினை "அன்பு மகள் அனிதா" விதைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். மாணவர்களின் தன்னெழுச்சியான போராட்டம் அரசியல் கட்சிகளிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நம் தமிழக அரசியல் கட்சிகளை வழிநடத்தும் தலைவர்கள் தன்முனைப்பைக் கைவிட்டு எல்லோரும் சேர்ந்து குரல் கொடுப்பதுடன், இழந்த மாநில உரிமைகளை ஒவ்வொன்றாகப்பெற போராடவேண்டும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தாளமுத்து, நடராசன் -

> ஈழ விடுதலைப் போராட்டத்தில் முத்துக்குமார், செங்கொடி
>
> நீட் எதிர்ப்புப் போராட்டத்தில் அனிதா என்று மனித உயிர்களை இழந்துதான் தமிழக மக்களைத் தட்டி எழுப்ப வேண்டியுள்ளது.
>
> இலட்சிய வாதிகள் புதைக்கப்படுவதில்லை அவர்கள் விதைக்கப்படுகிறார்கள்

என்ற முதுமொழிக்கேற்ப 'அனிதா'வின் ஈகமும் நமது இலட்சியப் போராட்டத்திற்கு - மாநில உரிமைப் போராட்டத்திற்கு - நீட் ஒழிப்புப் போராட்டத்திற்கு உரமாகட்டும்.

போராடுவோம்! இழந்ததைப் பெறுவோம்.

●

# அரசுப் பள்ளி நம் பள்ளி! அதுவே நமது பெருமை!

**அ. சத்யமாணிக்கம்**
இயக்குநர், கலிலியோ அறிவியல் மையம், மதுரை

நீங்கள் இருபது ஆண்டுகளுக்கு முன் அரசு பள்ளியில் படித்திருந்தால் அந்தப் பள்ளியின் இப்போதைய நிலையை அறிய ஒரு முறை அந்த பள்ளிக்குச் சென்று வாருங்கள்... இரண்டாயிரம் மாணவர்கள் படித்த அந்தப் பள்ளியில் தற்போது இருநூறு பேர் படிப்பதே அரிதாக இருப்பதை நம்மால் அறிய முடியும்.

அந்தஙப பள்ளி ஒரு ஐஏஎஸ், ஐபிஎஸ் , ஆசிரியர்கள், அதிகாரிகள் என்று எத்தனையோ நபர்களை உருவாக்கியிருக்கும். ஆனால் இன்று ஏன் இந்த நிலை.... அந்த அரசுப் பள்ளியைச் சுற்றிக் கடந்த இருபது ஆண்டுகளில் முளைத்த தனியார் பள்ளிகள் எத்தனை என்பதை ஒரு கணக்கெடுத்தால் தெரியும். அப்படியானால் அரசுப் பள்ளிகளைவிட தனியார் பள்ளிகள் தரமான கல்வியை நமது குழந்தைகளுக்குக் கொடுக்கின்றனவா? எது தரம்.....

மதுரையில் அண்ணாநகர் பகுதியில் ஒவ்வொரு நாள் காலையிலும் தண்ணீர் லாரிகள் படையெடுக்கும். அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் இல்லை. அந்தப் பகுதியில் தண்ணீர் ஒவ்வொரு லாரிக்கும் ஒவ்வொரு விலை இருக்கும். ஒரு லாரியில் ஒரு குடம் தண்ணீர் ரூ.13 (இதைக் குடிக்கலாம்), ஒரு லாரியில் ரூ10 (இதையும் குடிக்கலாம்) ரூ.6 (துணி துவைக்கலாம்), ரூ.3 (பாத்திரம் மற்றும் கழிவறைக்குப் பயன்படுத்தலாம் ரூ1,50 (இது அரசு லாரி கட்டணம்) இதில் இந்தத் தண்ணீர் இதற்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னவர்கள் யார்? இதில் எது நல்ல தண்ணீர், இதை அப்படியே கல்வியோடும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும் .அரசு பள்ளியைவிட தனியார் பள்ளியில் எந்த நம்பிக்கையில் குழந்தைகளைச் சேர்க்கின்றோம்? மிஞ்சி நிற்பது வியாபாரம் மட்டுமே.....

### அரசு பள்ளி ஆசிரியர்களின் பொறுப்பு

அரசு பள்ளி ஆசிரியர்கள் இன்றைய சூழ்நிலையில் தங்கள் வேலையைத் தக்கவைத்துக்கொள்ள, குழந்தைகளைத் தங்கள் பள்ளியில் கல்வியைத் தொடர படாத பாடுபடுகின்றார்கள் என்றே சொல்ல முடிகிறது. நான் கண்ட பல பள்ளி ஆசிரியர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் வேறு பகுதியில் இருந்து தங்கள் பகுதிக்குக் குழந்தைகளை அழைத்துவர வாகனவசதி செய்கின்றார்கள். கற்பித்தலில் மாற்றத்தை ஏற்படுத்த ஸ்மார்ட் போர்டு போன்ற நவீன கருவிகளைச் சொந்தப் பணத்தில் வாங்கி வைக்கின்றார்கள். தண்ணீர் சுத்திகரிப்புக் கருவிகளைப் பொருத்தியுள்ளார்கள். ஆனாலும் குழந்தைகள் வருவதில்லை.

### அரசு பள்ளியும் பெற்றோரும்

அரசுப் பள்ளியில் தங்கள் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்த பெற்றோர்கள் பொறுப்பேற்பது என்பது இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். கல்வி மேம்பாட்டுக் குழு என்ற பெயரில் அமைப்பு பள்ளிகளில் இருந்தாலும் அதைக் கூட்டுவது சவாலாகவே இருக்கின்றது. சில காரியங்கள் ஆசிரியர்கள் பெற்றோருக்குத் தெரியாமல் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது என்பதே இதற்குக் காரணம். தனது குழந்தை படிக்கும் பள்ளியில் என்ன குறையுள்ளது என்று எப்போதாவது பெற்றோர்கள் வினா எழுப்பி இருப்பார்களா?

ஆனால் பள்ளி என்பது ஆசிரியர்களும் குழந்தைகளும் மட்டும் உலாவும் இடம் இல்லை , இங்கே சமூகத்தின் பங்கு மிக முக்கியம். முன்பெல்லாம் ஒரு திருவிழா நடப்பதாக இருந்தால் கூட அதில் பள்ளி ஆசிரியர்களுக்கு அதில் பங்குண்டு, இன்னும் சொல்லப் போனால் படித்த ஆசிரியரே அங்கே கணக்கராக,

நடுநிலையோடு பேசுபவராக மதிக்கப்பட்டார்கள். ஊர் மக்களோடு நெருங்கிய உறவு இருந்தது. ஆனால் இப்போது அப்படி இல்லை. தான் பணிபுரியும் இடத்தில் தங்குவதற்கான சூழலை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொள்வதில்லை.

தெற்கே திருநெல்வேலியில் உள்ள ஆசிரியர் ஒருவரை, தர்மபுரியில் பணி நியமனம் செய்தால் அந்த ஆசிரியர் அதை முழு மனத்தோடு ஏற்றுக் கொள்வதில்லை. தனது குடும்பத்தின் நிலை கருதி வாரம் ஒரு முறை அவர் சொந்த ஊருக்கு வரும் நிலை உள்ளது. இன்னும் சிலர் பக்கத்தில் பத்து நிமிட பயணத்தில் குடியிருந்தாலும் அங்கேதான் செல்ல வேண்டும் என்று நினைப்பதுண்டு. மாலை 3 மணிக்கு அந்த ஊருக்கு வரும் வண்டிதான் கடைசி வண்டி என்றால் எப்படியும் அந்த வண்டியில் ஆசிரியர் போய்ச் சேரத்தான் வேண்டும் என்ற நிலை உள்ளது. இப்படி இருக்கும் போது ஊரோடு எப்படி இணைந்து வாழ, பள்ளியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**அரசுப் பள்ளியைக் காக்க அரசுப் பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தின் முயற்சி என்ன?**

அரசுப் பள்ளி ஆசிரியர் சங்கங்கள் ஆண்டுத் தொடக்கத்தில் குழந்தைகளை அரசுப்பள்ளியில் சேர்ப்பது குறித்துப் பேசியுள்ளார்களா? அரசுப் பள்ளி ஆசிரியர் சங்கங்கள் இன்றைய கல்வி நிலை குறித்து ஒரு விவாதத்தை நடத்தியுள்ளார்களா? மேற்கண்ட வற்றில் கவனம் செலுத்தவில்லை என்பதே உண்மை . இது குறித்தெல்லாம் பேசாமல் சங்கங்கள் வேறு என்னதான் செய்கின்றன.

இன்றைய கல்விச் சூழல் நாடு முழுவதும் கெட்டு நாற்றம் எடுத்து வருகிறது, துணைவேந்தர்கள் பணி முதல் ஆசிரியரின் விடுப்புக் கடிதம் பெறுவது வரை லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது.

**புத்தக வாசிப்பு**

படித்து முடித்தவரல்லர் ஆசிரியர்; படித்துக் கொண்டே இருப்பவர்தானே ஆசிரியர். ஆனால் ஆசிரியர்கள் படிக்கின்றார்களா? அதற்காகத் திட்டமிட்டுச் செயல்படுகிறார்களா? வகுப்பறைகளில் வாசிப்பு நடக்கிறதா? இல்லை.....

வாசிக்க வேண்டும், குழந்தைகளிடம், சக ஆசிரியர்களிடம், பெற்றோரிடம் ஆனால் இப்படி ஒரு கூடுதல் என்பதே இல்லாத போது அது கானல் நீராகவே தான் இருக்கும்.

**அரசுப் பள்ளி நமது பள்ளி என்ன செய்யப் போகின்றோம்?**

ஆயிரம் ஆயிரம் பிரச்சனைகள் இருந்தாலும் அர சுப் பள்ளி நமது பள்ளி. அதை வலுப்படுத்த பெற்றோர் கள், ஆசிரியர்கள், குழந்தைகள் என அனைவரையும் ஒருங்கிணைத்து அவர்களின் காரணங்களை அறிந்து செயலாற்ற வேண்டிய நேரமிது. திட்டமிட்டுப் புறக் கணிக்கப்படும் பொதுப்பள்ளிகளின் அருகில் உள்ள தனியார் பள்ளிகளை அகற்றாமல் அது சாத்திய மாகாது. ஆங்கில மாயை, கௌரவம் போன்ற வறட்டு வாதத்திற்கு இடம் கொடுக்காமல் நாம் நிமிர்ந்து நின்று செயலாற்றுவோம். உரக்கச் சொல்வோம் அரசுப்பள்ளி நம் பள்ளி, அதுவே நம் பெருமை.

●

நீட் தேர்வுக்கு எதிராகப் போராட்டம் நடத்துபவர்கள் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் அனுமதி வாங்கித்தான் போராட்டம் நடத்தவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்ததும், பெரிய கட்சிகள் எல்லாம் அனுமதி வாங்கி நடக்கவிருந்த கூட்டத்தையே எதற்கு வம்பு என்று நீக்கம் செய்தும் மாற்றியும் விட்டார்கள்.

இளம் கன்று அச்சம் அறியாது என்பார்கள் அதுதான் பெரிய அரசியல்வாதிகளே செய்யத் தயங்கிய போராட்டத்தை ஒரு நொடியில் நடத்திவிட்டார்கள் நுங்கம்பாக்கம் அரசுப் பள்ளி மாணவிகள். போலீசார் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறார்கள். மாணவிகளைக் குண்டு கட்டாகத் தூக்கி அப்புறப்படுத்துகின்றனர், ஒருபக்கம் வெளியேற்றப்படும் மாணவிகள் மீண்டும் வந்து சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவதால் போலீசார் செய்வதறியாது திகைத்து வருகின்றனர். கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் சாலை மறியல். அதிகமாக போலீசார் குவிக்கப்பட்டதும் அந்தப் பகுதி பொதுமக்கள் உடனே பள்ளி மாணவிகளுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கிவிட்டார்கள்.

மாணவிகள் நீட் தேர்வுக்கு எதிரான முழக்கத்தைத் தொடர்ந்து முழங்கிக்கொண்டு இருந்தார்கள். இதைத் தாங்கிக்கொள்ளாத போலீஸ் மாணவிகளை அடித்துப் பள்ளி வளாகத்திற்குள் தள்ளியது. போராடும் மாணவிகளுக்கு ஆதரவாக வந்த லயோலா கல்லூரி மாணவர்களை கைது செய்து இருக்கிறது போலிஸ். கைது செய்த மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் மாணவிகள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்...

சமூகநீதி காக்கப் புறப்பட்ட அரசுப் பள்ளி மாணவிகளைத் தாக்குகிற காவல்துறையை வன்மையாகக் கண்டிப்போம்.

- *லெனாகுமார்*

# களவு போகும் கல்வி உரிமை

**முனைவர் பேட்ரிக் ரேமண்ட்**
இயக்குநர், கலிலியோ அறிவியல் மையம், மதுரை

**த**மிழ்நாட்டில் காலம் காலமாகவே சமூக நீதியும் கல்வியும் பின்னிப் பிணைந்தே இருக்கின்றன. சமீப காலங்களில் கல்வியின் மீது நடத்தப்படுகின்ற தொடர் தாக்குதல் கல்வியும் காவியை நோக்கி பயணிக் கின்றதோ என்ற அச்சத்தை நமக்கு ஏற்படுத்துகின்றது. தமிழ்நாட்டில் புதியக்கல்விக் கொள்கை, சமஸ்கிருத மொழித் திணிப்பு, நீட் தேர்வு இவையெல்லாம் தமிழகத்தின் இடஒதுக்கீட்டின் மீதும், சமூக நீதியின் மீதும், தமிழ்மொழிக் கலாச்சாரத்தின் மீதும் தொடரப்படுகின்ற தொடர் தாக்குதல்களாகவே பார்க்க வேண்டியதாக உள்ளது.

புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் காவிக் கொள்கையை அறிமுகப்படுத்த நினைத்த மத்திய அரசு இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில் ஏற்பட்ட எதிர்ப்புணர்வைக் கருத்தில் கொண்டு பாராளுமன்றத்தில் பரிந்துரைகளை வைக்க இயலாமல் பின் வழியாக, கொள்ளைப்புறமாக புதியக் கல்விக் கொள்கையை அரங்கேற்றும் நடவடிக்கை களில் ஈடுபட்டிருக்கின்றது.

எம்.ஐ.டி போன்ற கல்வி நிறுவனங்களில் ஜாதி, மத ரீதியிலான தாக்குதல்கள், ரோகித் வெமுலா வீட்டின் முன்பு நடத்தப்பட்ட ஜாதி அரசியல், அனித்தாவின் தற்கொலை இவையெல்லாம் கல்வியானது காவு வாங்கப்படுவதன் அடையாளமாகவே படுகின்றன. ஆண்டாண்டுக் காலமாகத் தமிழகம் என்பது கல்விக்கும் சமூக நீதிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தை மேற்கொண்டு இருக்கின்றது.

சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்றும் கல்வியையும், சுகாதாரத்தையும் அடிப்படை வசதியாக மாற்றி மக்களுக்கு இலவயமாகச் செய்து தராத மத்திய மாநில அரசுகள் கல்வியின் மீது நடத்தப்படுகின்ற தொடர் தாக்குதல்கள் நாளை கல்வியானது வியாபாரச்சந்தையின் விலைபொருளாக ஆக்கப்படும் என்பதற்கான முழு அடையாளங்களும் இப்போது தென்படத் தொடங்குகின்றன.

கல்வி என்பது பதினான்கு வயது வரை அடிப்படை உரிமை என்று அறிவிப்பதற்கே மத்திய மாநில அரசுகளுக்கு இவ்வளவு காலம் பிடித்திருக்கின்றது. கல்வியின் வேர்கள் கிராமம் வரை சென்றடையும் என்ற நிலையினிலே அதனை வேரறுத்து விடுகின்ற , காவு வாங்குகின்ற முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. பாமரருக்கு ஒரு கல்வி பணக்காரர்களுக்கு ஒரு கல்வி என்று பல்வேறு நிறமாற்றங்களைக் கொண்டு தொடர்ந்து பயணிக்கின்றது.

அனைவருக்கும் சமமான ஒரே மாதிரியான கல்வி வாய்ப்பினை வழங்க வேண்டுமென்று கல்வியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். சமமான கல்வி வாய்ப்பு இல்லாத போது சமமான தேர்வு முறை எப்படி சாத்தியம் என்று கேட்கின்ற கேள்விகளுக்கு மத்திய, மாநில அரசுகளிடம் இருந்து விடை இல்லை. எத்தனை அனித்தாக்களைக் காவு வாங்கி இக்கல்வி முறையைத் தொடர போகின்றது என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. கல்வி என்பது ஏற்றத் தாழ்வுகளைக் களைவது என்று போதித்து வந்த நிலை யில் கல்விக்குள்ளேயே இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை எவ்வாறு களையப் போகின்றோம்.

பொதுப்பட்டியலில் கல்வி உள்ள நிலையில் மதம் சார்ந்து மொழி சார்ந்து, தொடுக்கப்படும் தாக்குதல் கல்வியின் அடையாளத்தைத் தொலைத்து விடும் அபாயத்தைத் தொடங்கியுள்ளது. அடையாளங்களை இழந்து சாமானியனை அந்நியப்படுத்தும் கல்வி சாதிக்கப் போவது என்ன?

மாணவர் எண்ணிக்கை குறைவான பள்ளிகளைத் தனியார் பள்ளிகளுடன் இணைக்கலாம் என நிதி ஆயோக் அளித்துள்ள பரிந்துரைகளைஅரசுப் பள்ளி களை அழிக்கவா? வளர்க்கவா? அரசுப் பள்ளிகளை முழுவதும், ஆரம்ப சுகாதார நிலையங்களை அடியோடும் தகர்ப்பதும் கீஜிளி வகுத்து தந்த பாதை அல்லவா?

சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் கடந்தும் இலவச, தரமான, கட்டாய கல்வியை வழங்க இயலாத அரசு வெட்கப்படவேண்டும். சாதனை எனத் தம்பட்டம் அடிப்பது தற்கொலைக்குச் சமம். தரமான கல்வியைப் பொதுப்பள்ளிகளைத் தாய்மொழியில் தருவதே உண்மையான வளர்ச்சி. உலகச்சந்தைக்குக் கல்வியைத் திறந்துவிடுவது கல்வியைக் குழி தோண்டிப் புதைக்கும் திட்டமே. கல்விக்கான பொது இயக்கத்தைக் கட்ட மைப்போம். நமக்கான வரலாற்றை நாமே எழுது வோம்! கல்வியின் ஏற்றத்தாழ்வினை வேரறுப்போம்!

●

# நீட் தேர்வை எதிர்ப்போம்

**கி. சேகரன்**
தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பாரூர்

**த**மிழகம் முழுவதும் கிராமங்களால் சூழ்ந்தது. கிராமத்தில் படிக்கும் மாணவனின் திறனோடு நகர்ப்புற மாணவர்கள் திறனை ஒப்பிடுவது கூடாது.

இப்போது, சி.பி.எசு.இ எனும் இந்திய அரசு கல்வித் திட்டத்தில், அந்தப் பாடத் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்குத்தான் இந்த 'நீட்' தேர்வுமுறை மிகவும் பயனளிக்கிறது. தமிழக கிராமத்தில் அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சி.பி.எசு.இ பாடத்திட்டம் என்னவென்பது தெரியாத சூழ் நிலையில் எவ்வாறு அவர்கள் 'நீட்'டை எதிர்கொள்ள முடியும். தமிழகத்தில் இந்தாண்டு 'நீட்' தேர்வு இல்லை இல்லையென்று இந்திய அரசு சொல்லிக்கொண்டே 'நீட்'டிற்கு நாளை அறிவித்துவிட்டது.

தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அதனை இந்திய அரசுக்கு அனுப்பி வைத்தபோதும் இந்திய அரசு ஓர் உண்மையான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அதன் விளைவால் அரியலூரில் அனிதாவின் தற்கொலை நேர்ந்து விட்டது. தாழ்த்தப்பட்ட சமூகத்தில் ஒரு மருத்துவர் உருவாக இருந்தார். ஆனால் அந்த எண்ணம் கருவிலே கருகியதுபோல ஆயிற்று. இன்றைக்குத் தமிழக மருத்துவக் கல்லூரியில் முதல் ஐம்பது இடத்தைப் பிடித்த மாணவர்கள் அனைவருமே பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் அவர்கள் பெரும்பாலும் இந்துத்துவா கொள்கையை உடையவர்களே. வரலாறு மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கிறது. அதாவது குலக்கல்வி முறையை, முன்னாள் தலைமை ஆளுநர் இராசாஜி கொண்டு வந்தார். அதைப்போலவே தற்போது பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் இந்தியாவில் அனைத்து கல்லூரிகளிலும் உயர்சாதி என்று சொல்லிக்கொள்ளும் ஐயர் எனும் சாதியினரே இருப்பார்கள்; இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டது. கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இனத்தைக் குறிவைத்து அரசுகளும் ஆட்சியாளர்களும் 'நீட்'டை எதிர்நோக்கி உள்ளனர். மதிப்பெண் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கை என்ற நிலைப்பாட்டை நோக்கி நாம் பயனிக்க வேண்டும். அப்போது தான் கிராமப்புற மாணவர்களின் விடியலும் அதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு ஒரு வெளிச்சமும் ஏற்படும்.

இப்படிப்பட்ட நிலையில் எப்படித் தமிழக மக்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்று நாம் எண்ணிப்பார்த்துச் செயலாற்ற வேண்டிய தருணம் இது. அதற்கு அனைவரும் ஒன்றுபட்டு எதிர்த்தால் ஒழிய 'நீட்' என்ற எமனைக் கொல்வது சாத்தியம் அல்ல. 'நீட்'டை எதிர்ப்போம்! மாணவர்கள் நலன் காப்போம்!

•



# சுட்டிக்காட்டுவதாலும் தட்டிக் கேட்பதாலும் சமூகக் குற்றங்கள் மாறாது

**ஆ. கருப்பையன்**
நெடுவாசல்

**சு**ட்டிக்காட்டுவதாலும் தட்டிக்கேட்பதாலும். சமூகக் குற்றங்கள் குறைந்தபாடில்லை - மாறாக ஆசிரியர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை பொறுப்பேற்கும் நிலை மலர வேண்டும்.

குழந்தைகளை மனித வளங்களாக உற்பத்தி செய்திடும் தொழிற்சாலைகளான பள்ளிக் கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் பெரும் பொழுது விடைகளையும் விழுமியங்களையும் சுட்டிக்காட்டுவதிலும் குழந்தைப்பருவத்திற்கே உரிய சிறுதவறுகளைத் தட்டி கேட்டல் என்ற பெயரில் தண்டிப்பதிலுமே கழிகிறது.

கால ஓட்டத்தில் சமூகத்தின் எல்லா நிலைகளிலும் மாற்றங்களும் அதற்கேற்ற வளர்ச்சிகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. அரசுப் பள்ளிகள் மட்டும் சமூகத்தின் நன்மதிப்பைத் தக்கவைப்பதிலும் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதிலும் ஆட்டம் கண்டு அழிந்து வரும் இனங்களின் பட்டியலில் இடம்பிடித்து விடும் அவல நிலைக்குத் தன்னைத் தானே நகர்த்திக் கொண்டு செல்கிறது.

சிலநூறு மூத்த ஆசிரியர்களின் நேர்மையான வழிகாட்டல்களாலும் பலநூறு இளந்தலைமுறை ஆசிரியர்களின் ஆரோக்கியமான செயல்பாடுகளினாலும் மட்டுமே அரசுப்பள்ளிகளால் இவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க முடிந்தது. தரமான கல்வியை வழங்கும் அரசுப்பள்ளிகளைத் தனியார் மோகம் என்ற சுனாமியால் அசைக்கக்கூட முடியவில்லை. தன்னம்பிக்கை இழந்த பள்ளிகள் மட்டுமே தனியார் மோகத்திற்குப் பலியாகி மாணவர் எண்ணிக்கை குறைந்து மூடப்படும் அபாயக்கட்டத்தைக் கடக்க முடியாமல் போராடிக் கொண்டிருக்கின்றன.

அன்று மேல்தட்டு மக்களின் குழந்தைகள் முதல் அடித்தட்டு மக்களின் குழந்தைகள் வரை அனைவரின் குழந்தைகளுக்கும் அடைக்கலம் கொடுத்து நீதிநெறி வழுவாது கல்வியை போதித்தது அரசுப்பள்ளிகள் மட்டுமே. இன்று குப்பத்துக் குழந்தைகளுக்கும் குடிசைவாழ் குழந்தைகளுக்கும் மட்டுமே புகலிடமாக அரசுப்பள்ளிகள் உருமாற்றமடைந்து வருகின்றன.

PISA போன்ற சர்வதேச அமைப்புகளும், இந்திய அளவிலும், மாநில அளவிலும் பல்வேறு அமைப்புகள் அரசுப்பள்ளி மாணவர்களின் கல்வி அடைவு நிலைகளை ஆண்டுதோறும் ஆய்வு செய்கின்றன. அவற்றின் ஆய்வு முடிவுகள் அரசுப்பள்ளிகளின் முகத்திரையினைக் கிழித்தெறியும்படியாகவே உள்ளன. எளிய சொற்களை வாசிக்கத் தெரியாத நிலையும் எளிய அடிப்படைக் கணக்குகளைச் செய்யத் தெரியாத நிலையும் தொடர் கதையாகி வருவதை ஆய்வு முடிவுகள் ஆண்டுதோறும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு வரை அரசுப் பள்ளிகளில் மாணவர் வருகை விகிதம் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் குறைவாகக் காணப்பட்டது. தற்போது பெற்றோர்கள் எப்பாடுபட்டாவது பிள்ளைகளைத் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பிவிடுகின்றனர். மாணவர்களும் அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் பள்ளிக்கு வந்துவிடுகின்றனர். அரசும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அத்தியாவசியமான அனேக வசதிகளைச் செய்து தந்து வருகிறது. இப்படி பெற்றோரும் அவர்களது பள்ளி செல்லும் குழந்தைகளும் அடிப்படை உரிமையான கல்வியை இலவசமாக வழங்கிடும் அரசும் அவரவர் கடமைகளைச் செம்மையாகச் செய்துவரும் பட்சத்தில் அரசுப்பள்ளிகளில் தரமான கல்வி மட்டும் களவுபோகும் மாயமந்திரத்திற்கு யார் பொறுப்பேற்பது என்பது இதுவரை புரியாத புதிராகவே உள்ளது.

பாமரர் முதல் பட்டம் பெற்றவர் வரை, கூலித் தொழிலாளி முதல் கோடீஸ்வரர் வரை என அனைவருமே அரசு வழங்கிடும் விலையில்லாப் பொருட்களையும், சலுகைகளையும் பெற மறுப்பதில்லை. ஆனால் அரசு வழங்கும் இலவசக் கல்வியை மட்டும் ஏன் வெறுக்கின்றனர்.

கல்வி முன்னேற்றமே தேசத்தின் முன்னேற்றம் என எண்ணி மத்திய மாநில அரசுகள் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துக்கொண்டே வருகிறது. கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் தனிச்சிறப்புகள் வாய்ந்த உன்னத இலக்குகளைத் தாங்கிய பல்வேறுதிட்டங்கள் இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் பெண் கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களில் மவாட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் (District Primary Education Programme) நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முடிவில் அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) அமல்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம் (RMSA) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இல்லாத அளவிற்கு இத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் தரமான கல்வி, இடைவிலகலைத் தவிர்த்தல், உள்கட்டுமான வசதிகளை நிறைவு செய்தல், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களைப் பல்வேறு பணியிடைப் பயிற்சிகள் மூலம் மேம்படுத்தி மாணவர்களின் கற்றல் அடைவுகளை உலகத்தரத்திற்கு இணையாகக் கொண்டு வருதல், சமூகப்பங்கேற்பினை உறுதி செய்தல் போன்றவை இத்திட்டங்களின் உன்னதமான இலக்குகளாகும். இத்திட்டங்களின் நிதி ஆதாரங்களையும் பணியிடைப் பயிற்சிகளையும் முறையாகப் பெற்று சரியாகப் பயன் படுத்தி வரும் பள்ளிகள் நாளொரு மேனி பொழுதுதொரு வண்ணமாக சமூக நன்மதிப்பைப் பெற்று மிளிர்கின்றன.

வானளாவிய நிதி ஆதாரங்களைக் கொண்டுள்ள திட்டங்கள் அடுத்தடுத்த நடைமுறையில் உள்ள போதும்கூட பல்லாயிரக்கணக்கான பள்ளிகளில் கழிவறைகள் பயன்படுத்தும் நிலையில் இல்லை, பாதுகாப்பற்ற பள்ளிக்கட்டிடங்கள் இன்னும் உள்ளன. குடிநீர் வசதி இல்லை என்று பஞ்சப்பாட்டு ஓயாது ஊடகங்கள் வழியே ஒலித்துக்கொண்டே இருப்பது சாமி வரங்கொடுத்தும் பூசாரி கொடுக்காத கதையாகத்தான் உள்ளது.

குழந்தைகளை உளவியல் ரீதியாக அணுகி வழி காட்டுவதற்கும், பங்கேற்றல் முறையில் கற்றிட சமவாய்ப்பினை உருவாக்கிக் கற்பித்தலுக்கும், அனுபவங்களைப் பெறும் கற்றல் முறையை வலுப்படுத்திடவும், பாலியல் சமத்தவத்தை உண்டாக்கிடவும், பாகுபாடின்மையைப் போக்கிடவும், உரிமைகளை அனுபவிக்கும் கற்றல் சூழல்களை அமைத்துக் கற்பித்திடவும், நவீன கல்வித் தொழில் நுட்பங்களைக் கையாண்டு கற்பித்திடவும், குழந்தைகள் நேயப் பள்ளிகளை உருவாக்கிடவும், ஒவ்வொரு குழந்தையையும் பண்முகத்திறன் கொண்டவர்களாக உருவாக்கிடவும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆண்டுதோறும் பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதற்காகத் திட்ட நிதியிலிருந்து கணிசமான தொகை செலவிடப்படுகிறது.

ஆசிரியர்கள் சிரமமின்றி பணியிடைப் பயிற்சி எடுத்துக்கொண்டு கற்பித்தல் யுக்திகளில் கைதேர்ந்தவர்களாக மாறிட பள்ளி அமைந்துள்ள இடத்தின் அருகிலேயே பயிற்சி மையம் (குறு வளமையம் - Fluster Resource Centre) இது தவிர வட்டார அளவில் முழு வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி மையம் நாடு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திட பல்லாயிரக்கணக்கில் ஆசிரியர் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசு இப்படி எல்லா நிலைகளிலும் திறம்பட செயல்படும்போது கூட வகுப்பறைகளுக்குள் கற்பித்தல் முறையிலோ அல்லது கற்றல் அடைவு நிலையிலோ வெகுசில பள்ளிகளில் மட்டுமே அபரிமிதமான மாற்றங்கள் நிகழ்வதாகச் செய்திகளில் காணமுடிகிறது.

பொதுத் தேர்வுகளில் தாய்மொழிப் பாடத்தில் தோல்வியடையும் ஆயிரக் கணக்கானோர்களைத் தடுக்க வழியேதுமில்லை. வகுப்பறையில் நடைபெறும் பல்வேறு வன்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஒரு கிலோமீட்டர் சுற்றளவிற்குள் ஓர் அரசுப் பள்ளியை அரசு தொடங்கியுள்ளது. ஆனால் முன் பருவக்கல்வி, தொடக்கக்கல்வியினைப் பெற பல கிலோமீட்டர் தூரம் வாகனங்களில் தனியார் பள்ளிகளுக்குச் செல்லும்போதும் வீடு திரும்பும் போதும் ஏற்படும் விபத்துகளில் பல பச்சிளங் குழந்தைகள் மரணமடைகின்றனர். இவற்றுக்கெல்லாம் யார் தான் பொறுப்பு?

அரசு, கல்விக்காக இத்தனை விலையில்லாப் பொருட்களையும் தரமாக அளித்தும் நிலைமாறவில்லையே ஏன்?

அரசு கல்வித்துறையில் கொண்டுவரும் திட்டங்களையும் சட்டங்களையும், இயக்கங்களையும் அரசு எந்திரத்தின் அச்சாணியாக விளங்கும் ஆசிரியர்களாகிய நாம் முயன்றால் ஏன் புதிய புதிய கல்வி திட்டங்களின் இலக்குகளை வெற்றியடையச் செய்திட முடியாது என எண்ணிய எங்கள் பள்ளி ஆசிரியர்கள் ஒன்றுபட்டோம். பள்ளியையும் அதனைச் சார்ந்துள்ள கிராமத்தையும் வளர்ச்சிப்பாதைக்கு எடுத்துச் செல்வதற்குரிய முழுமையான திட்டத்தினை கல்வித்துறையின் வழிகாட்டலுடனும் இக்கிராம மக்களின் ஒருங்கிணைப்புடனும் பல்துறைகளின் ஒத்துழைப்புடனும் உருவாக்கிடும் முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதன் விளைவாக சமீப காலங்களாக கல்வித்துறையில் கொண்டுவந்துள்ள திட்டங்களின்

இலக்குகளை முழுமையாக வெற்றியடையச் செய்துள் ளோம். 2005-06ல் 180 செண்ட் இடத்தினைப் பெற்று பள்ளியைப் புதிய இடமாற்றத்திற்குச் செய்து கற்றலுக்கு உகந்த சூழலையும் உருவாக்கியுள்ளோம். 2006-07ஆம் ஆண்டில் சிறுதானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட காலை உணவினை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கி இரத்த சோகையை போக்கினோம், 2006-2008ஆம் கல்வி ஆண்டிலேயே தொலைநோக்குப் பார்வையோடு 14 கணினிகள் இணையதள வசதி மற்றும் தொடுதிரை தொழில் நுட்பத்துடன் SMART CLASS ஒன்றினையும் BHEL நிறுவனத்தினை அணுகி சமூகப் புரிந்துணர்வுத் திட்டத்தின் கீழ் மொழி ஆய்வகம் ஒன்றினையும் 20 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கியுள்ளோம். இடைவிலகல், குழந்தைத் தொழிலாளர்கள் இருந்த நிலையினை முற்றிலும் போக்கியுள்ளோம்.

இவ்வாறு எங்கள் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களின் கூட்டு முயற்சியினாலும் ஆசிரியர் களிடம் மிகுந்து காணப்படும் சமூக அக்கறையி னாலும் மிகவும் மேம்பட வேண்டிய சாதாரண நிலையில் இருந்த இப்பள்ளியை அனைவரும் வியக்கும் வசதிகளுடன் தரமான கல்வியை வழங்கிடும் அசாதாரண நிலைக்கு உயர்த்தியுள்ளோம்.

இன்று எங்கள் பள்ளியின் சிறப்பான பல்வேறு செயல்பாடுகளைப் பாராட்டி மாநில அரசும் UNICEF போன்ற குழந்தைகள் நல சர்வதேச நிறுவனங்களும் பல உயரிய அங்கீகாரங்களை வழங்கி வெகுவாகப் பாராட்டி வருகின்றன.

சமீபகாலங்களில் கல்வித்துறையில் நடைமுறைப் படுத்திடும் திட்டங்களின் பெயர்கள் வெவ்வேறாக உள்ளன. அவற்றின் பிரதான நோக்கம் இடைவிலகல் இல்லாத அனைவருக்கும் தரமான கல்வி என்பதாகத் தான் உள்ளது.

திட்டங்களைப் பெயர் மாற்றம் செய்வதால் எந்த வொரு நிலைமாற்றமும் எளிதில் ஏற்படப் போவ தில்லை. மாறாக ஆசிரியர்களிடம் மனமாற்றம் ஏற்பட் டால் மட்டுமே அரசுப் பள்ளிகளின் தடுமாற்றத்தைத் தடுக்க முடியும்.

ஒருகாலத்தில் தான் தலைமையில் இயங்கும் துறை களில் ஏற்படும் தோல்விகளுக்கு அவரவர்களே பொறுப்பேற்றனர் குற்றங்கள் குறைந்து காணப் பட்டன. இன்று அரசு எந்திரத்தை இயக்கிடும் அனைவரும் மக்களின் வரிப்பணம் விரயமாயவதற்குப் பொறுப்பேற்கும் நிலை உருவாக வேண்டும்.

வகுப்பறைகளில் “சொல்வதைக் கேளுங்கள்” என்ற சர்வாதிகார கற்பித்தல் முறை ஒழிந்து “செய்வதைக் காணுங்கள்” என்ற ஜனநாயகக் கற்றல் கற்பித்தல் முறை மலர வேண்டும். மேலும் எதிர்கால நலன் என்று வர்ணிக்கப்படும் மாணவர்களின் கல்விப் பின்னடைவு களுக்கு ஆசிரியர்கள் கூடுதல் பொறுப்பேற்க வேண் டும். பல்வேறு உரிமைகளைப் பெற்றுத்தந்த தொழிற் சங்கங்களும் பணிக்காலச் சாரங்களைக் கற்பிக்க வேண்டும். இப்படி நடக்கும் பட்சத்தில் தமிழ்நாடு வேலை வாய்ப்புகளும், உற்பத்தி பெருக்கமும், சுதேசிய எண்ணங்களும் ஓங்கிய மக்கள் தேசமாக மாறும். •



# குலக்கல்விக்குக் கொள்ளியிடு!

**த. ரெ. தமிழ்மணி**
ஆசிரியர், திருவாரூர்

மோடி வித்தையைத்
தமிழரும் கற்கலாம்
காணிக்கை
கட்டைவிரல்.

முதுகில் தடவி
நூல் தேடுகிற
புதிய
சூழ்ச்சியின் பெயர்
நுழைவுத்தேர்வு.

மருத்துவம் கேட்கிற
காதுகளில்
ஈயத்தைக்
காய்ச்சி ஊற்ற
மனுதர்மத்திற்கு
எடுபிடியாய்
மந்திரிகள்.

நாட்டிற்காகக்
கேட்கவேண்டியவர்கள்
வீட்டிற்காகக்
கேட்பதால்
குற்றுயிராய்க் கிடக்கிறது
குமுகஞாயம்.

இனத்திலிருந்து
நோயாளிகளை மட்டும்
எதிர்பார்க்கிறது
இந்தியம்.

தமிழர்களைக்
கைநாட்டுகளாக
வைத்திருக்கவே
வெளியேற்றப் பார்க்கிறது
ஐந்திலிருந்தும்
எட்டிலிருந்தும்.

மண்வாடை வீசிய
கல்வியிலிருந்து
இப்போது
பிணவாடை.

முதன்மொழியின்
மூச்சைநிறுத்தி
பயிற்றுமொழியாகப்
பார்க்கிறது
பாடைமொழி.

அப்பன் தொழிலைப்
பிள்ளைகளுக்குக்
கட்டாயப் படுத்தியது
பழைய இந்தியா.

அரசுப் பள்ளியைத்
தனியாருக்கு
விற்பனை செய்கிறது
புதிய இந்தியா.

தமிழாடையில்
கொஞ்சகொஞ்சமாகப்
படிகிறது காவிக்கறை...
வெளுக்கும் முயற்சியை
விரைந்துமுடிப்போம்.

நமக்கு
நுழைவுத்தேர்வு
நடத்தும் இந்தியத்திற்குத்
தேர்வு நடத்தி
விரட்டுவோம்.

அதுவரை
நம் மண்ணிலிருந்து
தள்ளிவைப்போம்...
வாக்குச்சாவடியையும்
வருமானவரி
அலுவலகத்தையும்!



# நீட்தேர்வு புதிய இந்தியாவின் சமூக அநீதி

முனைவர் ஜா. மா. அருள்காமராஜ்

நீட்தேர்வால் ஏழை-எளிய, கிராமப்புற மாணவர்கள் பெரும்பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் பல துன்பங்களுக்கும், அல்லல்களுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கும் கொடுமை தமிழ்நாட்டில் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

தமிழக மாணவர்கள் இவ்வளவு தூரம் பாதிக்கப்படுவதற்கு முக்கியக் காரணம் இந்திய, மாநில அரசுகளின் செயல்பாடுகள்தாம். நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு கோரி தமிழக அரசு கொண்டுவந்த இரண்டு மசோதாக்களையும் வாங்கி இந்திய அரசு அப்படியே வைத்துக்கொண்டது. அதைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கவும் இல்லை; திருப்பி அனுப்பவும் இல்லை.

“பல்வேறு கல்வி முறைகள் உள்ள ஒரு நாட்டில் குறிப்பிட்ட முறையிலான பாடத்திட்டத்தில் படித்தவர்கள் மட்டும் பயன் அடையும் வகையில் தேர்வு நடத்துவது எந்த வகையில் நியாயம்? இது ஒரு திட்டமிட்ட சதிப் பின்னல் அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? இதற்குள் ஓர் உள்நோக்கம் இருக்கிறது என்பது வெளிப்படையாகிவிட்டது.

இதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தாலும், மத்தியில் உள்ளவர்கள் விடாப்பிடியாக இந்த முறையை நடைமுறைப்படுத்துவது ஒருவகையான மேல்தட்டு சாதி உணர்வு இருப்பது அப்பட்டமாக தெரிகிறது.

இந்திய அரசும், உச்சநீதிமன்றமும் இந்த நீட் தேர்வுக்குத் துணை போயிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டால் சமூகநீதிக்கு ஆபத்து எங்கே குவிந்திருக்கிறது என்பது தெரியாமல் போகாது.

அமைச்சரவையிலும், நீதித் துறையிலும்கூட சமூக நீதிக்கு இடம் இருக்க வேண்டும் என்ற குரல் வெடித்துக் கிளம்ப வேண்டிய அவசியம் வந்தாகி விட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்டு சமூக நீதியில் அக்கறை உள்ளவர்கள் இது குறித்துச் சிந்திக்க வேண்டும்" என்கிறது விடுதலை நாளிதழ் (ஜூலை 2016).

## நீட் தேர்வு கடந்து வந்த பாதை

நீட் தேர்வு 2013 ஆம் ஆண்டு முதல் முறையாகத் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு, கேரளா உட்பட பல மாநிலங்கள் நீட் தேர்விற்குத் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தன. கல்வி இணைக்கப் பட்டியலில் (Concurrent List) வருவதால் தங்கள் அதிகார வரம்பில் தலையிடுவது போன்று ஆகும் எனச் சில மாநிலங்கள் வாதிட்டன. அதே ஆண்டு சூலை மாதம் நீட் தேர்வு அரசியலமைப்பிற்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் கூறியது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நீட் தேர்விற்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வழங்கியது. 2016 ஆம்ஆண்டு நடந்த சட்டசபை தேர்தல் வாக்குறுதியில் தம்முடைய ஆட்சி வந்தால் நீட்டிற்கு எதிரான சட்டம் கொண்டுவரப்படும் என உறுதியளித்திருந்தார் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. இதைத் தம் தேர்தல் பரப்புரையிலும் உறுதிப்படுத்தினார். இது சம்பந்தமாகப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் அவர் கடிதம் அனுப்பினார்.

நீட்தேர்வு 2017 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள் நடைபெற்றது இதில் மாணவ மாணவியர் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என சர்ச்சைகள் கிளம்பின.

நீட்தேர்வில் ஆங்கிலம் மற்றும் பிறமொழிக் கேள்விகள் வேறாக இருந்தன எனத் தொடரப்பட்ட வழக்கில் நீட் தேர்விற்கான முடிவுகளை வெளியிடக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் மே மாதம் 26 ஆம் நாள் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. நீட் முடிவுகளை வெளியிட சென்னை உயர்நீதி மன்றம் விதித்த தடைக்கு உச்சநீதி மன்றம் ஜூன் 12 ஆம் நாள் இடைக்காலத் தடை விதித்தது. தேர்வு முடிவுகள்

ஜூன் 23 ஆம் நாள் வெளியிடப்பட்டன. தமிழ் நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான சேர்க்கையின்போது, மாநிலப் பாடத்திட்டத்தின்கீழ்ப் படித்த மாணவர்களுக்கு 85 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் வகையில் மாநில அரசு பிறப்பித்த அரசாணை ஜூலை 14 அன்று நீக்கம் செய்யப்பட்டது. நீட் முறையில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க வகை செய்யும் தமிழக அரசின் சட்ட மசோதாவுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து, தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஜூலை 25 அன்று வலியுறுத்தினார்.

தமிழக மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களுக்கு மட்டும் நீட் தேர்விலிருந்து விலக்களிக்கும் அவசரச் சட்டம் கொண்டு வந்தால், அதற்கு ஒத்துழைக்க மத்திய அரசு தயாராக இருக்கிறது என்று இந்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகஸ்டு 13 ஆம் நாள் தெரிவித்தார். நீட் தேர்வு முறையில் இருந்து நடப்பு கல்வியாண்டில் மட்டும் விலக்கு அளிக்க வகை செய்யும் அவசர சட்டத்தின் வரைவை இந்திய அரசின் ஒப்புதலுக்கு ஆகஸ்டு 14 அன்று தமிழக அரசு அனுப்பி வைத்தது. நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க முடியாது என்று ஆகஸ்டு 22 அன்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது; மேலும் நீட் தேர்வு அடிப்படையிலேயே மாணவர்களுக்கான சேர்க்கையை வரும் செப்டம்பர் 4-ஆம் நாளுக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. ஆகஸ்டு 23 ஆம் நாள் மதிப்பெண் பட்டியல் வெளியிடப்பட்டது. செப்டம்பர் 1 அன்று நீட்டிற்கு எதிராக வழக்கு தொடர்ந்த அனிதா என்ற மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

## வஞ்சிக்கப்பட்ட தமிழகம்

“தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், இப்பொழுதுள்ள தேர்வு முறையில் (+2 தேர்வு அடிப்படையில்) அதிக இடங்களைப் பெற்றுவிடுகிறார்கள் என்பதால், இதனை எப்படியும் ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சூழ்ச்சி, வஞ்சகம், சதித்திட்டம்தான் அகில இந்திய நுழைவுத் தேர்வு (நீட்) என்பதாகும்.

“தமிழகம் மட்டும்தான் நீட் தேர்வுக்கு எதிராக இருக்கிறது. பெரும்பாலான மாநிலங்கள் அதை ஏற்றுக்கொண்டுவிட்டனவே என்று கேட்கிறார்கள். முதலில் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தைப் போல் அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகள் அம்மாநிலங்களில் இல்லை. எனவே, மருத்துவப் படிப்புகளுக்குப் பொது இடங்கள் கிடைப்பதால், தங்கள் மாணவர்களுக்குத் தமிழ்நாடு போன்ற மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்து விடும் என்று அமைதியாக இருக்கின்றன. குறிப்பாக, உயர் சிறப்பு மருத்துவக் கல்வி இடங்கள் என்று எடுத்துக்கொண்டால் தமிழ்நாட்டில் மட்டும் 192 இடங்கள் இருக்கின்றன. பெரிய மாநிலங்களில் ஒன்றான மத்திய பிரதேசத்தில் 2 இடங்கள்தாம். பல மாநிலங்களில் ஒற்றை இலக்க எண்ணிக்கையில்தான் இந்தப் படிப்புக்கான இடங்கள் இருக்கின்றன. ஆந்திரத்தில் 1978-ல் கொண்டுவந்த சட்டத்தின் அடிப்படையில், நீட் தேர்வு எழுதினாலும் மருத்துவக் கல்லூரிகளில் அந்த மாநில மாணவர்களுக்குத்தான் இடம் ஒதுக்கப்படுகிறது. தெலங்கானாவிலும் இது தொடர்கிறது. அப்படி இருக்க, நீட் தேர்வைத் தமிழகம் மட்டும் எதிர்ப்பது சரியல்ல என்று பிற மாநிலங்கள் பேசுவது அர்த்தமற்றது” என்கிறார் சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்க பொதுச்செயலாளர் ஜி.ஆர். இரவீந்திரநாத்.

தமிழகத்தில் நீட் தேர்வு பத்தாம் பசலித் தனமாகவும் முட்டாள்தனமாகவும் எதிர்க்கப்படுவதுபோலக் கற்பிதம் செய்துகொண்டு, தமிழக மாணவர்களின் திறமையைக் குறைத்து மதிப்பிடக் கூடாது, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பாடங்களை முறையாக நடத்தினால் தமிழக மாணவர்கள் நீட் தேர்வை ஊதித் தள்ளி விடுவார்கள்.

தமிழகப் பாடத்திட்டத்தை சி.பி.எஸ்.இ.-க்கு இணையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்றெல்லாம் நீட் தேர்விற்கு ஆதரவாகப் பல்வேறு வாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. நீட் தேர்வை எதிர்ப்பதற்குத் தமிழக மாணவர்களின் திறமையோ, தமிழகப் பாடத்திட்டத்தின் தரமோ முதன்மையான காரணமல்ல. நீட்தேர்வு, தமிழகத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு, குறிப்பாக அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் உரிமையைத் தமிழக அரசிடமிருந்து தட்டிப் பறிக்கிறது என்பது தான் மையமானது. இந்த அநீதியை மிகவும் நைச்சியமான வழியில் மைய அரசும், நீதிமன்றங்களும் செய்கின்றன. மாநிலப்பாடத்திட்டம்தரமற்றது, மாநில அரசு நடத்தும் தேர்வுகள் தரமற்றவை; மையபாடத்திட்டம், தேசியத்தேர்வுகள் என்றால் தரமானது; மாநில அரசு நிர்வாகம் ஊழல் மயமானது, சி.பி.ஐ. போன்ற மைய அரசின் அமைப்புகள் அப்பழுக்கற்றவை; மாநிலக்கட்சிகள், குறிப்பாகத் திராவிடக் கட்சிகள் ஊழ லும், முறைகேடுகளும் நிரம்பியவை, தேசியக் கட்சிகள் நேர்மையானவை என்றவாறு ஒரு பொய்யை சமூக நீதிக்கு எதிரான கும்பல் தொடர்ந்து கட்டமைத்து வருகிறது. அதன் நீட்சி தான் நீட் தேர்வுத் திணிப்பு.

நீட்தேர்வானது, மருத்துவக் கல்வி பயிலும் வாய்ப்பைப் பணக்கார வீட்டு வாரிசுகளின் தனியுரிமையாக்குகிறது. பணக்கார மாணவர்களுக்கு நூறு சதவீத இடஒதுக்கீடு என்ற புதிய சமூக நீதியை மருத்துவக் கல்வியில் புகுத்துகிறது. மருத்துவக் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுப்ப

தாகக் கூறிக்கொண்டு வழங்கப்பட்ட தீர்ப்பு அதற்கு நேர் எதிரான விளைவையே அளித்திருக்கிறது.

"அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு பத்தியும் சமூக நீதியையும், சமத்துவத்தையும் பரிந்துரைக்கிறது. ஆனால், இந்த நீட்தேர்வு, அதற்கு நேரெதிராக இருக்கிறது. இந்தியா என்பது ஒற்றைத் தேசம் கிடையாது. அது, பல்வேறு தேசிய இனங்கள் வாழும் மாநிலங்களின் தொகுப்பு. பல்வேறு தேசிய இனங்களின் மாணவர்களின் திறனை ஆராய ஒற்றைத்தேர்வு என்பது சுத்த அயோக்கியதனம். எப்படி எதுவும் இதுவரை சேராமல் இருக்கும் வடகிழக்கு மாணவனும், எல்லாச் நலன்களையும் பெற்ற டெல்லி மாணவனும் போட்டி போடுவான். இருவருக்கும் ஒரே தேர்வு என்பது மக்களை மடையர்கள் ஆக்கும் வேலை இல்லையா? அது மட்டுமல்ல, புதியகல்விக் கொள்கையை மக்கள் மன்றத்தில் வைக்காமல், அதில் உள்ள சாரங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றும் வேலையைத்தான் இந்திய அரசாங்கங்கள் செய்து வருகின்றன. அதில் ஒரு பகுதிதான் இந்த நீட்தேர்வு" என்கிறார் பேராசிரியர் அனில் சடகோபால்.

நீட் தேர்வுக்கும் உலக வர்த்தக அமைப்புக்கும் உலக மூலதனத்துக்கும் சம்பந்தம் இருப்பதாகவும் அவர் விவரிக்கிறார், "உலக வர்த்தக அமைப்புக்குச் சில வாக்குறுதிகளை இந்திய அரசு அளித்துள்ளது. அதில், ஒன்று இந்தியச் சுகாதாரத் துறையை முழுவதும் தனியார் மயமாக்குவது. அதில் தங்குத்தடை இல்லாமல், அந்நிய நிதியை அனுமதிப்பது. இது நிறைவேற வேண்டுமானால், இந்தியப் பொது சுகாதாரத் துறையைச் சிதைக்க வேண்டும். அதைச் சிதைக்கத்தான் இந்த நீட் தேர்வு. இப்போதுள்ள மருத்துவக் கல்வி முறையில் மாணவர்கள் சிலகாலம் கிராமத்தில் பணியாற்ற வேண்டும். அதற்கான ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால், நீட்தேர்வில் அதற்கான வாய்ப்பே இல்லை. இதனால், கிராம மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அழியும். அந்த இடத்தில் தனியார் மருத்துவமனைகள் வரும். நீங்கள் நீட்தேர்வைத் தட்டையாகப் புரிந்து கொள்ளாமல் இந்தப் பின்னணியில்தான் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நீட்தேர்வைச் சர்வதேச அரசியல் அல்லாமல் சமூகநீதி கண்ணோட்டத்தில் பார்த்தீர்கள் என்றால், வாய்ப்பு மறுக்கப்பட்டப்பின் தங்கிய சமூக மக்களை, மருத்துவத் துறையில் உள்ளே வரவிடாமல் பார்த்துக் கொள்ளும் அரசியல் தெரியும்".

### மருத்துவம் கேட்டவருக்கு மரணம் பரிசு

ஒடுக்கப்பட்ட இனம், அம்மா இறந்துவிட்டார், அப்பாவுக்கு வெளியூரில் கூலி வேலை, ஒண்டிக் குடித்தன ஓட்டு வீடு. அதிலும் கழிவறை வசதி கிடையாது. இந்தச் சூழலிலும் இவ்வளவு மதிப்பெண் பெற்றிருக்கிறார் அனிதா. கல்வி மட்டுமே எதிர்காலம் என்பதை உணர்ந்து, பன்னிரண்டு ஆண்டுகள் படித்து, பத்தாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை உயிரைக் கொடுத்துப் படித்து, ப்ளஸ்டூ-வில் அதிக மதிப்பெண் பெற்று, மருத்துவப் படிப்பு கிடைக்கும் என்றிருந்த அனிதாவின் வயிற்றிலும் வாழ்விலும் அடித்திருக்கிறது இந்திய அரசாங்கம்.

### நிரந்தரதீர்வு

நீட்தேர்வால் மருத்துவம் படிக்க முடியாமல் தற்கொலை செய்துகொண்ட அரியலூர் மாணவி அனிதாவின் மரணம் தமிழகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அனிதாவின் மரணத்திற்குக் காரணமான இந்திய மாநில அரசுகளைக் கண்டித்தும் அனிதாவின் மரணத்திற்கு நீதி கேட்டும் நீட்தேர்வை நிரந்தரமாக ரத்து செய்யக் கோரியும் மாணவர்கள், சமூக இயக்கங்கள், அரசியல்கட்சிகள், படைப்பாளிகள், சமூகப் போராளிகள் தொடர்ந்து போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். அந்தப் போராட்டங்களில் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நீட்தேர்வுக்கு எதிரான வழக்கை விரைவாக விசாரித்து நீதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றொரு புறம், ஒவ்வொரு மாநிலமும் அதன் மருத்துவ சேவைக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் வகையில் மருத்துவ மாணவர் சேர்க்கை முறையை நிர்ணயித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். அதற்குக் கல்வியையும், மருத்துவக் கல்வியையும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என இந்திய அரசுக்கு அரசியல் ரீதியில் அழுத்தம் கொடுத்து மாநில உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளும் வலுப் பெறுகின்றன. இத்தகைய போராட்டங்கள் தமிழகத்தின் சமூக நீதியை வென்றெடுக்கவும், நிலைநாட்டவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

●




## இந்தியாவை ஆள மெக்காலேவின் உத்தி...

"I have travelled across the length and breadth of India and I have not seen one person who is a beggar, who is a thief such wealth I have seen in this country, such caliber, that I do not think we would ever conquer this country, unless we break the very backbone of this nation, which is her spiritual and cultural heritage and therfore, I propose that we replace her old and ancient education system, her culture, for if the Indians think that all that is foreign and English is good and greater that their own, they will lose their selfesteem, their native culture and they will become what we want them, a truly dominated nation".

*Lord Mecaulay's Address to the British Parliment on 2nd Feb 1853*

# இந்தியக் கல்விமுறை தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை!

**பொழிலன்**
ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்

ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே தேர்வு - என்கிறது இந்திய அரசு.

ஒரே தேர்வை நடத்துகிற இந்திய அரசு ஒரே கல்வி முறையை, ஒரே வகைக் கல்விக் கூடங்களை உருவாக்கிடவில்லை, உருவாக்கவும் இயலாது.

இன்றைய கல்விக் கூடங்கள் அரசுக் கல்விக் கூடங்களாக இல்லை. முழுக்க முழுக்கத் தனியார் கல்வி நிறுவனங்களாகவே அரசால் வளர்க்கப்படுகின்றன. அரசுப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் யாரும் சேரவில்லை என்பதாகக் காரணம் காட்டி அரசே அரசுப் பள்ளிகளை மூடிவிடுகிறது அல்லது தனியாருக்கு விற்பனை செய்துவிடுகிறது.

பொறியியல், மருத்துவக் கல்வி போன்ற உயர்கல்விக் கூடங்களாக எப்படித் தனியார் நிறுவனங்கள் காசு பறித்துச் சூறையாடும் நிறுவனங்களாக அரசால் ஏற்கப்படுகின்றனவோ, அப்படித் தனியார் பள்ளிக் கல்விக்கூடங்களும் தனியார் நிறுவனச் சுரண்டல்களுக்கு வழி அமைத்திடும் வகையில் அரசால் ஏற்கப்படுகிறது.

ஆக, கல்வியை இலவயமாகத் தரவேண்டுமான அக்கறையோடு அரசு இல்லை. பங்கீட்டு (ரேஷன்) அட்டையில் எப்படி வருமானம் பதிவு செய்யப்பட்டு அதற்குத்தக தேவைப்படும் பொருள்கள் மட்டும் தரப்படுகின்றனவோ, அரசு - பொது மருத்துவமனைகளில் வருமான அடிப்படையில் கட்டணம் இல்லாமலும், கட்டணத்தோடும் மருத்துவம் எவ்வாறு பார்க்கப்படுகின்றனவோ அப்படியாவது அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு முழு இலவயமாகவும், பொருளியல் வாய்ப்புள்ள மாணவர்களுக்குக் கட்டணத்தோடும் கல்வி அளிக்கப்படும் நடைமுறையை அரசு உருவாக்கலாம்.

அப்படிச் செய்யும்போது, கல்விவழியான இழப்புகளைக்கூட சரி செய்ய முடியும்.

அடுத்து, இந்தியா முழுமையும், ஒரே வகைக் கல்விமுறையை உருவாக்கிட முடியாது என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்தியா முழுமையும் ஒரே வகைக் கல்வித் தேவையுடையதாக இருந்திடவும் இயலாது.

காசுமீரத்தில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கும், வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மாணவர்களுக்கும் கடல் வழிக்கல்வி, கடலியல் ஆய்வு, கடல் வழிப் பொருள்கள் என்பவை பற்றியதான கல்வியைப் பயில வேண்டிய தேவை இல்லை. அப்படியான கல்வி அவர்களுக்குப் பயன்படவும் முடியாது.

அதேபோல், பனிபொழிகிற மலைவாழ் பகுதிகளுக்கான உழவுமுறை, வாழ்க்கை முறை, தொழில்முறை பற்றியதான கல்வியைத் தமிழக, ஆந்திர, ஒரியா போன்ற மொழித்தேசவாழ் மாணவர்கள் படிக்க வேண்டிய தேவையும் இல்லை. அவர்களுக்கு அவை பயன்படவும் முடியாது.

தமிழகத்தின் நிலவியல் அமைப்பு, உழவுச் சிறப்புகள் வரலாற்று நிகழ்வுகள் இவற்றை காசுமீரத்திலோ, உத்திரப் பிரதேசத்திலோ இருப்பவர்கள் படிப்பதும் இல்லை, படிக்க வேண்டிய தேவையும் இல்லை.

பழந்தமிழகத்தின் சேர, சோழ, பாண்டியர்கள் யார்? யார்? எப்போது ஆண்டார்கள்? என்னென்ன செய்தார்கள்? அவர்களின் சிறப்புகள் என்ன, குறையென்ன? வணிகம் எப்படி நடந்தது? தொழில்

எப்படி நடந்தது என்றெல்லாமான மேற்படி நிகழ்வு களைக் பீகாரிய, அரியானா மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? என்றால் தேவையில்லைதான். உலக அளவிலான அரசியல் வரலாற்றியல் படிக்கிற ஆய்வு மாணவர்களுக்கு வேண்டுமானால் அவ்விளக் கங்கள் தேவைப்படலாம். ஆனால் பொதுப்பட எல்லா மாணவர்களும் படிக்க வேண்டிய தேவையில்லை.

அதேபோல்தான், பீகாரிய, உத்திரபிரதேச, பிற வட மொழித் தேசப் பழம் வரலாறுகளையோ, அரசுகளைப் பற்றிய விளக்கங்களையோ தமிழக மாணவர்களோ, கேரள மாணவர்களோ தெரிந்துகொள்ள வேண்டிய தேவை ஏதும் இல்லை.

ஆக, அப்படியான சூழலில் இந்தியா முழுமையும் ஒரே வகைக் கல்விமுறை என்று சொல்வது தேவை யற்றதும், பொய்யானதும் ஆகும்.

இந்தியா முழுமையும் ஒரே வகைக் கல்வி முறையை அமைக்க முடியாது. எனவே, அப்படிச் சொல்வது முழுமையாக ஏமாற்றுவதே ஆகும்.

கல்விமுறை என்பது அந்த அந்த மொழித் தேசங்களுக்குரியதாகவே இருக்க வேண்டும்; இருக்க முடியும்.

அந்த வகையில் தமிழ் நாட்டிற்கான கல்விமுறையை இந்திய அளவில் தீர்மானிப்பது இயலாது, கூடாது.

தமிழக அளவில் தீர்மானிக்கப்படாத கல்விமுறை என்பது தமிழர்களை ஏமாற்றும் கல்வி முறையாகவே அமையும்.

எனவே, தமிழக அளவில் தமிழக அரசின்வழியான, தமிழக உழைக்கும் மக்கள் வாழ்வியலுக்கான கல்விமுறையே தேவை.

அதன்வழி தமிழகத்திற்கான கல்வி அதிகாரம் தமிழ்நாட்டு அரசியல் அரங்கில் மட்டுமே இருக்க லாமே யல்லாமல் இந்திய அரசிடம் இருப்பது சரியில்லை அல்லது இருக்கவும் கூடாது.

இன்றைக்குத் தமிழகக் கல்வி உரிமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்து அழிக்கிறது இந்திய அரசு.

1975-இற்கு முன்னர் முழுமையாகத் தமிழக அரசுக்கு மட்டுமே உரிமையுடையதாக இருந்த கல்வி முறையை நெருக்கடிகால ஆட்சி (எமர்ஜன்சி)யைப் பயன்படுத்தி இந்திய அரசு பறித்துக்கொண்டு போனது.

இந்திய அரசு ஊழியர்களுக்குத் தனிக் கல்வி முறையை உருவாக்குவதாகத் தொடங்கி, என்.சி.ஆர்.டி கல்விமுறையை நடைமுறைப்படுத்தியது. அதன்வழி நவோதயா பள்ளிக் கூடங்களைத் திறந்தது. சி.பி.எஸ்.இ.பள்ளிகளை நுழைத்தது.

இப்போது இவற்றின் வழியாகவெல்லாம் ஒருங்கிணைத்து 'நீட்' எனும் வடிகட்டி வைத்துத் தமிழக மண்ணில் தமிழக மாணவர்களுக்கு இடம் கொடுக்காமல் நசுக்குகிறது.

இவற்றில் எல்லாம் இந்தித் திணிப்பு என்பது மட்டும் இல்லை, இந்தியத் திணிப்பு என்கிற பார்ப்பனியத்திணிப்பும் இருக்கிறது. சாதிய வருணப் பாகுபாட்டுத் திணிப்பும் இருக்கிறது. முதலாளிய - பன்னாட்டு சுரண்டலுக்கான திணிப்பும் இருக்கிறது.

இவற்றாலெல்லாம் தமிழ் மட்டும் அழிக்கப்படவில்லை, தமிழக வாழ்வும், பண்பாடும், அரசியலும், பொருளியலும் அழிக்கப்படுகின்றன. தமிழகம் இந்தியாவால் சூயையாடப்படுகிறது. பன்னாட்டுக் கொள்ளை நிறுவனங்களால் கொத்திக் குதறப்படுகிறது.

எனவே, இந்தியக் கல்விமுறை என்கிற கயிறு தமிழ்நாட்டை,. தமிழர் வாழ்வை நசுக்கிக் கொலை செய்ய வந்துள்ள தூக்குக்கயிறு என்பதை உணர வேண்டும்.

தமிழ் வாழ மட்டுமன்று, தமிழர்கள் வாழவே, தமிழ்நாடு வாழவே இந்தியக் கல்வி முறையை எதிர்த்தாக வேண்டும்.

ஆக, கல்வி அதிகாரம் இந்திய அரசிடம் இருப்பது சரியில்லை என்பதுபோலவே, கல்விக்கான நுழைவுத் தேர்வு என்கிற பெயரில் இந்திய அளவிலான கல்வித் தேர்வுகளை நடத்துவது என்பதும் சரியில்லை; கூடவும் கூடாது.

எனவே 'நீட்' - என்றும், 'நெக்ஸ்ட்' என்றும், வேறு என்ன பெயரில் இந்திய அரசு நடத்துகிற நுழைவுத் தேர்வுகளையும் தமிழகம் ஏற்கக்கூடாது.

அதேபோல் இந்திய அளவிலான பன்னாட்டு அளவிலான கல்விக் கூடங்கள் என்கிற பெயரில் சி.பி.எஸ்.இ. கல்விக்கூடங்களோ, வித்யா மந்திர் கல்விக் கூடங்களோ, பன்னாட்டுக் கல்விக் கூடங்களோ தமிழ கத்தில் நடத்தவிட முடியாது என்கிற வலுவான முழக் கங்கள் முன்னெடுக்க வேண்டும், நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

எனவே, இந்தியக் கல்வி தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை என்கிற வலுவான முடிவோடும், முழக்கத்தோடும் தமிழக மாணவர்கள் மக்கள் செயலாற்றிட வேண்டும் என்று தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் அனைவரையும் அழைக்கிறது.

# அனிச்சம் பூவே...!

வழக்குரைஞர் **அங்கயற்கண்ணி**

அனிச்சம் பூவே அனிதா!
மோப்பக் குழையும் அனிச்சம் போல
நோக்கம் குலைந்ததால்
இறந்து போனாயா..?

அறிவுக் கருவே அமைதியின் உருவே
உன் மறைவு கனவின் இறப்பா?
இல்லை
அது நம் கல்வியின் இறப்பு.

வாட்டிய வறுமையில் வாடாது நின்று
தீட்டிய உன்திறன் தேர்வுத் தாளில்!
நீட்டிய இரும்புக் கரமாய் - இந்தியா
'நீட்' டின் வடிவை உனக்கு தந்தது.

வான்நோக்கி வளர்ந்த உன் - கல்வி அறிவை
வீணாக்கிப் பார்த்தது 'அரம்ப (ரௌடி) இந்தியா'
உயர்ந்த நோக்கில் உயர் ஆணைகேட்டு
உச்ச நீதிமன்றம் நாடிய செல்வமே! - அது
உச்ச நீதி மன்ற மல்ல, அச்ச நீதி மன்றம்!
காவு கொடுத்த இந்தியத்திற்கு கால்வருடும் மன்றம்!

ஊர் சுற்றி உலகைப் பார்க்கும் - 'இந்தியம்'
என மார்த்தட்டி மாலை சூடும்!
அகண்ட பாரத கனவை நாட்ட
இருண்ட வாழ்வை நமக்குக் கொடுக்கும்!

இழவு வீடாய் எம் தமிழ் நாட்டை
'இழிவு இந்தியா' மாற்றுகின்றது!
உழவு வீட்டின் ஒளி விளக்காக
ஒளிர்ந்த உன்னை ஒடுக்கிப்பார்த்தது.

மண்ணின் கல்வியின் மானம் காக்க
மறத்தியாய் நின்ற குழுமூர் விளக்கே!
துரத்தி அடிக்கும் நீதிதான் 'இந்தியம்'
துவண்டதால் தூக்கில் துயராகி நின்றாய்!

கல்வியை மறுக்கும், கழிவைத் திணிக்கும்!
தேசிய இனத்தின் மேன்மையை அழிக்கும்!
சாதியம் வளர்க்கும் மதவியல் பரப்பும் - அக்
கழிசடை நாடுதான் டிஜிட்டல் இந்தியா!

வெள்ளைத் தோலும், பூணூல் கயிறும்
ஆதிக்க வெறியால் பெற்றக்கல்வியை
சாதி இழிவைத் தாங்கி நிற்கும்
நீயும், நானுமா எடுத்துக் கொள்வது!

மலத்தை அள்ளுபவன் மலை போன்று வளர்வதா?
மாட்டைப் பிடித்தவன் 'நீட்'டை வெல்வதா?
பார்த்தது இந்தியம்! பதறியது பார்ப்பனியம்!
பூட்டியது இரும்புக் கரம்கொண்டு கல்வியை
'நீட்' என்னும் நீண்ட தூக்குக் கயிறால்!

கல்வி எனுமென் இனத்தின் உரிமையை
களவு இந்தியா கவ்விக் கொள்வதா?
இழவு வீடாய் மாறும் தமிழகமே!
இடித்து நொறுக்குவோம் இந்தியக்கோட்டையை!
தேசிய இனங்களின் ஒற்றுமையா இந்தியா?
இல்லை! இல்லை!
தேசிய இனங்களின் சிறைக் கூடமே இந்தியா!

நுகர்வதால் அழியும் 'அனிச்சமலராம்' - கல்வி
நுகர மறுத்ததால் மறைந்த அனிச்சம் நீ!
சிகரமாய் நின்னுயர் ஈகம் வாழ
உறுதி ஏற்போம், வெற்றி பெறுவோம்!

# 'நீட்' தேர்வு : சமத்துவத்துக்குச் சாவுமணி

பாவலர் நா. முத்துநிலவன்

ஐயா காமராசர் முதல்வராக இருந்தபோது, மருத்துவக் கல்லூரியில் சேரவிரும்பிய சுமார் 100 மாணவர்களின் விண்ணப்பங்கள், முதல்வரின் தனிச் பரிந்துரைக்கு வந்ததாம். 10சீட்டுகள், முதல்வரால் தேர்வு செய்யப்படும் சிறப்பு அனுமதி இடமாகக் கருதி ஏழை மாணவர்க்கு வழங்கப்படுவது வழக்கம்.

பல்வேறு வேலைகளுக்கிடையில் பத்தே நிமிடத்தில் அந்த 10சீட்டுக்குரிய விண்ணப்பங்களைத் தேர்வு செய்தாராம் காமராசர். இதுகண்ட ஊழியர்கள் "எப்படி இவ்வளவு வேகமாத் தேர்வு செய்தீர்கள்?" என வியந்தார்களாம்.

"விண்ணப்பத்துல, அப்பா கையெழுத்துப் போடுற இடத்துல கைநாட்டு வச்சிருந்த விண்ணப்பங்களாத் தேடி எடுக்கப் பத்துநிமிசம் போதும்ல ன்னேன்?!" என்று காமராசர் பதில் சொன்னதாகச் சொல்வார்கள்!

அதாவது, "படிக்காத பெற்றோர்களுடைய பிள்ளைகளின் படிப்புக்கே முன்னுரிமை தரவேண்டும்" என்று காமராசர் நினைத்திருக்கிறார்!

இது அப்போ!!!!

ஆனால் இப்போ...?

"யாருடைய தந்தை, லட்சம்-கோடிகளைக் கொட்டிக்கொடுக்கத் தயாராக இருக்கிறார்களோ அவர்கள் மட்டும் விண்ணப்பித்தால் போதும்" என அறிவிக்கவில்லையே தவிர, மாநிலங்களின் கருத்தையும் இதுபற்றிக் கேட்காமல், அப்படித்தான் சட்டம் பேசுகிறது இந்திய மோடி அரசு !

### "நீட்" தேர்வு என்றால் என்ன?

நீட் (National Eligibility cum Entrance Test-NEET) தேர்வு என்பது, பொது மருத்துவம், பல்மருத்துவம், மற்றும் ஓமியோபதி மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு அகிலஇந்திய அளவில் நடைபெறும் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வாகும். மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் நடத்தும் இத்தேர்வு இந்திய மருத்துவ நுழைவுத் தேர்விற்கு (All India Pre. Medical Test - AIPMT) மாற்றாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இந்த நுழைவுத் தேர்வானது அனைத்து அரசுக்கல்லூரிகளுக்கும் தனியார் கல்லூரிகளுக்கும் பொருந்தும் என்று சொல்கிறார்கள்!

ஜெயலலிதா முதல்வராக இருந்த போது நீட் தேர்விற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதமருக்குக் கடிதம் எழுதினார். இதுகுறித்து உச்சநீதிமன்றத்திலும் வழக்கு தொடுக்கப்பட்டது. ஜெயலலிதா மறைந்த பின்னர், தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் 01-02-2017அன்று அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு, நீட் தேர்வி லிருந்து தமிழக மாணவர்க்கு விலக்களிக்க வேண்டி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசு ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. இப்போது 95 நாட்களான பிறகும் இதற்குரிய முடிவை மத்திய அரசோ பிரதமரோ இன்றுவரை பதிலேதும் தரவில்லை. வரும் மே-7, இந்த அகில இந்திய நுழைவுத் தேர்வு நடக்க உள்ள சூழலில் இந்தக் குழப்பத்திற்கு மத்திய அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

இதனால் இந்த ஆண்டு மருத்துவக் கனவில் இருக்கும் தமிழ்நாட்டு மாணவர், மத்தியஅரசின் முடிவுப்படி நீட் தேர்வு நடக்குமா அல்லது மாநில அரசு முடிவின்படி நுழைவுத் தேர்வு இல்லாமலே +2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவப்படிப்பு கிடைக்குமா எனும் பெரும் குழப்பத்தில் கிடக்கின்றனர்.

இதற்கிடையில் இந்தி உள்ளிட்ட பத்து இந்திய

மொழிகளில் தேர்வு நடக்கும் என மத்திய அரசு அறிவித்ததால் விண்ணப்பித்த தமிழ்நாட்டு மாணவர் பல்லாயிரவர், +2 தேர்வு முடிவை விட இந்த முடிவை எதிர்பார்த்துள்ளனர்.

**நீதிமன்றம் நுழைவுத் தேர்வு வேண்டாம் என்றது ஏன்?**

பொதுவாக, பன்னிரண்டாம் வகுப்பு அரசுத் தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் உயர்கல்வி, தொழிற்கல்விக்கான வாய்ப்புத் தரப்பட வேண்டும். இல்லையேல் அது அரசுத்தேர்வையே அலட்சியப் படுத்தியதாகிவிடும். மற்றும் நுழைவுத் தேர்வை எழுதத் தனியாகப் பயிற்சி மையம் செல்ல, கிராமத்து மாணவர்க்கு வாய்ப்போ வசதியோ இருக்காது. இது நகர்ப்புற வசதிபடைத்த மாணவர்க்கே வசதியாகும் என்பதுதான் சமூக ஆர்வலர்களின் கருத்தாகும்.

கிராமங்களின் ஏழை மாணவர்களுக்கும், கிராமம் மற்றும் நகரங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மாணவர் மற்றும் சிறுபான்மையோர்க்கும் உயர் கல்வி தருவதுதானே நல்ல அரசாக இருக்க முடியும்? இவர்களைப் புறக்கணித்துவிட்டு நகரில் வசதியானவர் மட்டும் வளர்வது சமத்துவமற்ற சமுதாய வளர்ச்சியாக அல்லவா இருக்கும்?

2004-2005இல் +2 தேர்வெழுதியவர்கள் சுமார் 5லட்சம் மாணவர். இவர்களில் கிராமப்புற மாணவர்கள் சுமார் 2லட்சம்பேர். அந்த ஆண்டிற்குரிய மருத்துவ இடம் 1125. இதில் -நுழைவுத்தேர்வில் தேர்வு பெற்ற கிராமப்புற மாணவர்கள் வெறும் 227பேர்கள் மட்டுமே. அதாவது சுமார் 5% கிராமப்புற மாணவர்க்கே மருத்துவப் படிப்பு கிடைத்தது. இது சமத்துவ சமுதாயத்திற்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி. முக்கியமான இந்தக் கருத்தை முன்வைத்து, அன்றைய திமுக தலைமையிலான தமிழக அரசு வாதிட, நீதிமன்றமும் இதனை ஏற்று “இனி மருத்துவப் படிப்புக்கு நுழைவுத் தேர்வு கூடாது” என்று நல்ல தீர்ப்பளித்தது.

**இப்போது நுழைவுத் தேர்வு மீண்டும் நுழைந்தது எப்படி?**

அன்றைய மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் கபில்சிபலின் கருத்தை ஏற்று, “நாடு முழுவதற்கும் ஒரே நுழைவுத் தேர்வு நடத்தலாம்” என்று எம்சிஐ (MEDICAL COUNCIL OF INDIA) எனும் இந்திய மருத்துவக் குழு பரிந்துரைத்தது. இதன்படி 2010இல் இருந்த மத்திய காங்கிரஸ் அரசும் பொது நுழைவுத்தேர்வு நடத்தத் திட்டமிட்டது. இதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் 115 மனுக்குள் வந்தன. மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் இருவர் நுழைவுத் தேர்வுக்கு எதிராக 18-07-2013இல் தீர்ப்பளித்ததால் நுழைவுத் தேர்வு தொலைந்தது மூன்றாவது நீதிபதியான ஏ.ஆர்.தவே மட்டும் நுழைவுத் தேர்வை ஆதரித்தார். எனினும் பெரும்பான்மை கருதி வழக்குத் தீர்ப்பு நுழைவுத்தேர்வுக்கு எதிராகவந்தது.

(இதனால் 2014, 2015ஆம்ஆண்டுகளும் நுழைவுத் தேர்வு இல்லாமல் போனது. தமிழகத்தின் 85% இடங்களுக்கு +2 மதிப்பெண் அடிப்படையில் இடம் கிடைத்தது இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அருந்ததியர் இன, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் ஏழை மாணவர்கள் மருத்துவக் கல்வி படித்து வருகின்றனர்! இந்த நிலை இனி தொடராது என்றுதான் நீட் நுழைவுத் தேர்வு வந்திருக்கிறது!)

மத்தியில் பாஜக அரசு அமைந்தவுடன், அது நுழைவுத் தேர்வுக்கு ஆதரவு நிலையெடுத்தது. நுழைவுத் தேர்வு வேண்டாமென்ற தீர்ப்புக்கு மறுசீராய்வு மனுப் போட்டது. ஏற்கெனவே நுழைவுத் தேர்வுக்கு ஆதரவாக இருந்த நீதிபதி ஏ.ஆர்.தவே தலைமையிலான நீதிபதிகள் குழு நுழைவுத் தேர்வுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து “தேசிய நுழைவுத் தேர்வுச் சட்டம்-2016 ஆகஸ்டு, 2016இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வந்தது வினை!

**நீட் தேர்வு நேர்மையாக நடக்கும் என்பதாவது உண்மையா?**

“மாநிலக் கல்வித்துறையால் நடத்தப்படும் தேர்வுகள் தரமாக இல்லை, நேர்மையாக இல்லை, நாங்கள் தரமாகவும் நேர்மையாகவும் தேர்வு நடத்தி அதிலிருந்தே தரமான மருத்துவ மாணவரைத் தேர்வு செய்யப் போகிறோம்” என்று சொல்லும் நுழைவுத் தேர்வு நேர்மையாளர்களுக்குச் சில கேள்விகள் -

(1) மாநிலத் தேர்வுகள் அதிகபட்சமாக -அதுவும் தமிழ்நாட்டில்- மிகச்சிறந்த கட்டுப்பாடுகளுடன் நடந்துவருவதை நாடே அறியும். இதற்கு நேர்மாறாக மார்ச் - 2007 இல் நடந்த மருத்துவ முதுநிலைப் பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் முறைகேடு நடந்ததே! 45மருத்துவர்கள் உட்பட 52பேர் மீது சிபிஐ வழக்கு தொடர்ந்ததே இது எப்படி? (தினமணி-21-03-2007)

(2) மத்தியப் பிரதேச இதே பாஜக அரசின் “வியாபம்” என்று “செல்லமாக” அழைக்கப் படும் அரசுப் பணியாளர் தேர்வில் -குறிப்பாக மருத்துவ நுழைவுத் தேர்வில்- ஆள்மாற்றி அடித்த கூத்து நாடுமுழுவதும் சிரித்ததே பத்தாம் வகுப்புக் கூடப் படிக்காத பல ஆயிரம்பேர் நாடுமுழுவதும் இப்போதும் மருத்துவராக இருப்பதாக வரும் தகவலுக்குப் பதிலென்ன? பலகோடி புரண்ட இந்த நுழைவுத் தேர்வு லட்சணத்தில் இந்த “அகில இந்திய நுழைவுத் தேர்வு“ நடக்காது என்பதற்கு உத்தரவாதம் உண்டா?

(3) அண்மையில் மத்தியஅரசு நடத்திய அஞ்சல் துறைத் தேர்வில் தமிழே தெரியாத பீகார் மாணவர்கள் இலக்கண மதிப்பெண்களை அள்ளிக் குவித்த கதைகள் ஊடகங்களில் வந்தனவே! இந்தப் பின்னணி என்ன?

(4) நுழைவுத் தேர்வுக்குப் பரிந்துரை செய்த இந்திய மருத்துவக் கவுன்சிலின் தலைவரே ஊழல் வழக்கில் மாற்றப்பட்டது உண்மையெனில், இவர்கள் நடத்தும் தேர்வு நாடுமுழுவதும் இந்த லட்சணத்தில்தானே நடக்கும்?

**மாநில உரிமை பறிப்பால் என்ன ஆகும்?**

“கல்வி, மருத்துவம் இரண்டையும் மாநிலப் பட்டிய லிலேயே இடம்பெற வேண்டும்”என்று அரசியல் சட்டம் வகுத்தளித்த அண்ணல் அம்பேத்கர் மிகவும் சிந்தித்தே இவற்றுக்கான வரையறைகளை வகுத்தளித்தார். ஆனால், இன்று பத்தாம் வகுப்புப் படிப்புக்கே இரண்டு வினாத்தாளாம்! அதில் மொழித் தாளை மாநிலஅரசு எடுக்கும், அறிவியல், கணிதத் திற்கான மற்றொரு வினாத்தாளை மத்திய அரசே எடுத்துத் தரும் என அத்துமீறும் எதேச்சாதிகார மத்திய அரசின் “புதிய தேசிய கல்விக் கொள்கை”யின் முன்னோட்டமே இந்த நீட் தேர்வு!

**மாநில கல்வியைப் பறிப்பது மாநில மக்களின் உரிமைப் பறிப்பல்லவா?!**

“மாட்டுக்கறி சாப்பிடாதே” என்பதற்கும், “மருத்துவ மாணவர் தேர்வில் மாநில அரசு தலையிடாதே” என்பதற்கும் வேறுபாடுள்ளதா என்ன? இந்தியா முழுதும் இருந்து மாணவர்களை இவர்கள் தேர்வு செய்து தருவார்களாம்! அவர்களுக்கு மாநில அரசு மாநில மக்களின் வரிப்பணத்தில் கல்வி வழங்கவேண்டுமாம்! “நீ அரிசி கொண்டுவா! நா உமி கொண்டு வர்ரேன். ரெண்டுபேரும் எங்கவீட்டுத் திண்ணையில உக்காந்து ஊதி ஊதித் தின்போம்” என்பது புரியாதா என்ன?

**“நீட்” தேர்வால் யாருக்கு லாபம்? யாருக்கு நட்டம்?**

கோடிகோடியாய் இலஞ்சம் பெற்று
தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு
அங்கீகாரத்தை வாரி வழங்கிய
இந்திய மருத்துவ கவுன்சிலின்
முன்னாள் தலைவர் கேத்தன் தேசாய்

“நீ சிபிஎஸ்சியில படிச்சாலும் சரி, மாநில அரசுப் பள்ளியில படிச்சாலும் சரி எங்க பயிற்சிக்குத்தான் வரணும்” என்று சவால் விடப்போகும், தனியார் பயிற்சி மையங்கள் எனும் பெயரில் நுழையப் போகும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு லாபம். அதோடு, இந்தியா முழுவதற்கும் ஒரே நோட்ஸ் எனும் தனியாருக்கு லாபம்! இந்தியா முழுவதும் பெரிய மால்களைப் போல வரப்போகும் பெரிய மருத்துவக் கல்லூரிகளையும், மருத்துவமனைகளையும் திறக்கப் போகும் கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு லாபம். கமிஷன் அரசியல் வாதிகளுக்கு!

“சிபிஎஸ்சி மாணவர்கள் இரண்டு வருடம் படிப்பதை நாங்கள் இரண்டே மாதத்தில் மெட்ரிக் மற்றும் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குத் தரப்போகிறோம்” என்று அவர்கள் அள்ளி விட்டுக் கல்லாக் கட்டுவார்கள்!

பலபாடு பட்டுப் பெற்ற இடஒதுக்கீடு நீடிக்க எந்த உத்தரவாதமும் நீட் தேர்வில் இல்லை! இதுதான் கார்ப்பரேட்டுகளும் காவிகளும் சேர்ந்து செய்யும் சதியோ என்னும் சந்தேகம் சமூக ஆர்வலர்களுக்குப் பலமாக எழுந்திருக்கிறது! ஏழைகளுக்கு மருத்துவக் கல்வியே கிடைக்க வில்லை யெனில், கிராமப்புற ஏழைக்கு இனி மருத்துவமே கிடைக்கப் போவதில்லை என்பதே நிஜம்!

கூலிவேலை பார்க்கும் பெற்றோரின் நிலையை மீறி, தனது கடினஉழைப்பு மற்றும் அறிவால் மேலே வரப்பார்க்கும் அரசுப் பள்ளி மாணவ-மாணவியர் இந்தப் பயிற்சி கிடைக்காமல், மருத்துவக் கல்வியை மறந்துவிட வேண்டும். அல்லது, இந்தக் கொள்ளையில் சிக்கி அந்தக் குடும்பமே சீரழியவேண்டும்.

முதல்தலைமுறைப் பட்டதாரிகள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மற்றும் மலைவாழ் மக்கள் சிறுபான்மையினர் எனச் சமூகத்தின் விளிம்புநிலை மக்கள் தம் பிள்ளைகளின் இடஒதுக்கீட்டோடு வாழ்க்கையை இழந்துவிட வேண்டும். அல்லது, தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்காரும், முற்போக்கு இடது சாரித் தலைவர்களும் போராடிப் பெற்றுத்தந்த இடஒதுக்கீட்டை நிலைநாட்ட மீண்டும் ஒரு பெரும் போருக்குத் தயாராக வேண்டும். அவ்வளவுதான்.

**இனி முடியுமா என்னும் சந்தேகம் வேண்டியதில்லை!**

இந்திய அரசியல் சட்டத்தையே இடஒதுக்கீட்டுக் காக முதன்முதலாகத் திருத்தியது தமிழ்நாட்டுப் பெரியாரின் போராட்டம். அது பழங்கதையல்ல என்று காட்டும்படி, அறவழிப் போராட்டத்தால் அவசரச் சட்டத்தோடு நிரந்தரச் சட்டத்தையும் ஓரிரு நாளுக்குள் கொண்டுவரச் செய்தனர் மெரினா இளைஞர்கள்.

மனித முன்னேற்றத்தின் அடிப்படைக் காரணியான கல்வியில் மேல்தட்டு மற்றும் மேல்சாதி ஆதிக்கத்தை முறியடிக்க வேண்டும். வரலாறு நெடுகிலும் தொடரும் ரத்தம் சிந்திய போரில் இன்றைய ஒவ்வோரடி முன்னேற்றமும் அடுத்த தலைமுறைக்கானதாகும் என்பதைப் புரிந்து ஒவ்வொருவரும் நடக்க வேண்டும். தமிழ்நாடு அரசும் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும். அவ்வளவே!

# தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்
# மூன்றாமாண்டு நிறைவும்
# தொடர் செயல் திட்டங்களும்

**ஒருங்கிணைப்புக் குழுவினர்**
தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்

தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் - தொடங்கி மூன்றாண்டாகியிருக்கிறது.

'தமிழே கல்வி மொழி...

தமிழ்வழிப் படித்தோர்க்கே வேலை...

தமிழ்நாட்டுக்கே கல்வி உரிமை...

என்கிற மூன்று முழக்கங்களையும் முதன்மை முழக்கங்களாக முன்னிறுத்திச் செயல்படுகிறது தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்.

கடந்த 2014 ஆகத்து மாதம் 17ஆம் நாள் மதுரையில் அதன் தொடக்க மாநாடு நடந்தது. எழுச்சியுடன் நடந்த அந்தத் தொடக்க மாநாட்டிற்கு முன்பாகவே ஆறேழு மாதங்கள் தமிழகம் முழுவதும் நான்கு பகுதி களில் கலந்தாய்வுகள் நடைபெற்றன. இந்த இயக்கத்தை எப்படிக் கொண்டு செல்லலாம் எனத் தமிழறிஞர்கள், ஆர்வலர்களைக் கொண்டு நடத்தப் பெற்ற கலந்தாய்வு களின் முடிவுகளைக் கொண்டே இந்த இயக்கம் முனைந்து செயல்பட்டு வருகிறது.

தமிழ்வழிக் கல்விக்காகவும், தமிழ் வழிப் படித் தோர்க்கே வேலை என்பதற்காகவும் முப்பதாண்டு களுக்கும் மேலாகவும், தொடர்ச்சியாகவும் பல இயக்கங்கள் செயல்பட்டன; செயல்பட்டும் வருகின்றன.

ஆயினும் அந்த அமைப்புகளெல்லாம் மேற்படி முழக்கங்களுக்கான குறிப்பான இயக்கங்கள் அல்ல.

தமிழகத்தின் பல்வேறு நெருக்கடிகளுக்காகவும் செயல்படுகிற இயக்கங்களே, தமிழ்வழிக் கல்விக்கான தமிழ் வழிப் படித்தோர்தம் வேலை வாய்ப்புகளுக்கான தேவைகளுக்காகவும் போராட்டங்கள் நடத்தின.

எனவே போராட்டத்தின்போது நூற்றுக்கணக்கினர் அல்லது பெருமுயற்சியில் ஆயிரக்கணக்கினர் ஒருங்கிணைந்து ஆர்ப்பாட்டம் நடத்துவது அல்லது முழங்கிடுவது என்றளவிலேயே செயல்பாடுகள் இருந்தன.

இயக்கங்களின் முழக்கங்களும், ஓங்கிய ஒலிப்பு களும் தமிழக மாணவர்களின் ஆசிரியர்களின் செவிகளுக்குள்ளோ உணர்வுகளுக்குள்ளோ சென்றிடவில்லை.

அதனால் யாருக்கு இவையெல்லாம் தேவைப்பட வேண்டுவனவோ அவர்கள் இவை பற்றியெல்லாம் கருதாமல் இருந்தனர்; இருக்கின்றனர்.

ஆனால் 1965இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டமானாலும் சரி, அதற்கு முன்பாக 1938 தொடங்கி நடந்த போராட்டங்களானாலும் சரி அவற்றில் மாணவர்களின் பங்கேற்புகள் மிகுதியாக இருந்தன. எனவே அவை வலுவாக நடந்தன என்பது மட்டுமின்றி ஆட்சியாளர்களும் அப் போராட்ட கோரிக்கைகளை ஏற்று அடிபணிந்தனர்.

அதுபோல் இன்றைய கல்வி நிலைச் சூழல்களுக்காக மாணவர்களை, ஆசிரியர்களை, கல்வித் தொடர் புடையவர்களை விழிப்படைய செய்யவும், போராட வைக்கவுமான திட்டங்களிலேயே தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் தொடங்கப்பட்டது.

முழுக்க முழுக்க இந்த இயக்கம் மாணவர் களிடமும், ஆசிரியர்களிடமும், கல்வியாளர்களிடமும் களம் அமைக்கும் நோக்கிலேயே செயல்படுகிறது.

அதற்காகத் தமிழகம் அளாவி மாணவர்களை, ஆசிரியர்களைச் சந்திக்கிறது. அவர்களின் பேராற்றல் களை ஒருங்கிணைக்கிறது.

ஆக, அதற்காகத் தொடங்கப்பட்ட இந்தத் தமிழ் நாட்டுக் கல்வி இயக்கம், கடந்த 2014 ஆகத்து 17ஆம்

நாள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஒவ்வொன்றாய் எடுத்துக் கொண்டு செயலாற்றி வருகிறது.

மூன்றாண்டுகளாய்ப் பிப்ரவரி 21ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளன்று தமிழகத்தில் ஏறத்தாழ 15 மாவட்டத் தலைநகரங்களில் கல்வி இயக்கத்தின் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேரணிகளை நடத்தி வருகிறது.

பல ஊர்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் அப் பேரணிகளில் பங்கேற்றனர். தொடர்ந்து தனியார் பள்ளிக் கூடங்கள் எல்லாம் காசு பறிக்கும் நிறுவனங் களாக இயங்கிடும் போக்குகளை எதிர்த்திடும் வகை யில் **தனியார் பள்ளிகளைத் தடை செய்து அவற்றை அரசுப் பள்ளிகளாக்கிட வலியுறுத்தியும்,** அரசுப் பள்ளிகளை ஊக்கப்படுத்திடும் வகையிலும், பரப்பல் செயற்பாட்டைத் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் முன்னின்று நடத்தியது.

அவற்றின் தொடர்ச்சியாகத்தான் முதலாமாண்டு மாநாடு கோவையில் நடந்தது. கோவையில் நடை பெற்ற மாநாட்டின் ஆறு முழக்கங்கள் இன்றைக்கும் தேவையான முழக்கங்கள்.

- ❖ அரசுப் பள்ளிகளைத் தரப்படுத்துவோம், அருகமைக்கல்வி முறையை நடைமுறைப்படுத்தி அனைவருக்கும் கல்வியை இலவயமாக்குவோம்.
- ❖ அரசுப் பள்ளிகளை அதிகப்படுத்துவோம்! தனியார் பள்ளிகளைத் தடை செய்வோம்!
- ❖ அரசுப் பள்ளிகளில், தமிழ் வழியில் படித்தோர்க்கே உயர்கல்வி வேலை வாய்ப்புகளை அளித்திட வலியுறுத்துவோம்!
- ❖ அரசு ஊழியர்களின், அரசுப்பள்ளி ஆசிரியர் களின் பிள்ளைகள் அரசுப் பள்ளிகளிலேயே பயின்றிட வலியுறுத்துவோம்!
- ❖ மழலையர் பள்ளிகளை நடத்திடவும், அதுவரை தமிழ் வழி மழலையர் பள்ளிகளை அரசு உதவி பெறும் பள்ளிகளாக ஏற்று நல்கை வழங்கிடவும் வலியுறுத்துவோம்!
- ❖ தமிழ்நாட்டு அரசிற்கே... தமிழகத்தின் கல்வி உரிமை எனப் போராடுவோம்!

ஆக இந்த ஆறு முழக்கங்களும் இன்றைக்கும் தேவையான முழக்கங்களாக உள்ளன. அந்த முழக்கங் களைப் பரப்பிடும் வகையில் தமிழகத்தின் பல ஊர்களில், கருத்தரங்கங்களும், நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

அதேபோல் வேலூர் அம்மூரில் 2016-ஆகத்து 21-இல் நடந்த மாநாட்டின் முதன்மை முழக்கங்களாக இரண்டு முழக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

- ❖ தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகளைப் பாதுகாப்போம்!
- ❖ இந்திய அரசின் (புதிய) கல்விக் கொள்கையை மறுத்திடுவோம்!

என்ற இரண்டு முழக்கங்களும் செயல் வடிவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்காகப் பெருமளவில் பணியாற்ற வேண்டியுள்ளது.

ஊர் ஊராக உள்ள அனைத்துப் பள்ளி, கல்லூரி மாணவர்களிடமும் பரப்பல் செய்ய வேண்டியுள்ளது.

மாநாடு வேலூர் மாவட்டத்தில் நடந்ததால் ஓரளவு வேலூர் மாவட்டம் முழுக்க உள்ள அரசுப் பள்ளிப் பிள்ளைகளிடம் பரப்பல் செய்யப்பட்டது.

மாணவர்களுக்கென்று பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

அடுத்து, தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் மூன்றாமாண்டு மாநாடு புதுக்கோட்டையில் எதிர் வரும் செப்டம்பர் 17ஆம் நாள் நடக்க இருக்கிறது.

இந்த மாநாட்டின் முழக்கங்களாக நான்கு முழக்கங் களைத் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் முன் வைத்திருக்கிறது.

- ❖ தமிழ்நாட்டுக் கல்வியின் அதிகார எல்லை தமிழ்நாட்டு அரசுக்கு அல்லாமல் வேறெந்த அரசுக்கும் இல்லை!
- ❖ 'நீட்' உள்ளிட்ட இந்திய நுழைவுத் தேர்வுகள் எளிய மக்களை ஏமாற்றுவன! மொழி இன உரிமைகளைப் புறக்கணிப்பன!
- ❖ அரசுப் பள்ளிகளே மக்களின் பள்ளி!<br>அரசுப் பள்ளிகளைக் காப்போம்!<br>அவற்றிலேயே பிள்ளைகளைச் சேர்ப்போம்!
- ❖ அரசு ஊழியர்களின் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளிலேயே சேர்த்திடுங்கள்!

ஆகிய நான்கு முழக்கங்களை முன்னிறுத்திப் புதுக்கோட்டை மாநாடு ஒருங்கிணைக்கப்படுகிறது.

அவற்றின்படி தமிழகக் கல்வியின் அதிகாரம் தமிழக அரசுக்கு மட்டுமே எல்லையுடையதாக இருக்க வேண் டும் என்றும், அதில் தலையிடுகிற எந்த அதிகாரமும் இந்திய அரசு உள்ளிட்டுப் பிற எந்த அரசுக்கும் இருக்கக்கூடாது என்றுமானதே முதல்முழக்கம்.

உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத கொடுமை நிலையில் தமிழகம் ஆட்பட்டிருக்கிறது.

ஒரு மொழித் தேச மக்கள் ஒரே அரசின் ஆளுமைக் குரியவர்களாக இருப்பார்களேயன்றிப் பல அரசுகளுக்கு அடிமைப்பட்டிருப்பதில்லை.

ஆனால், தமிழக மக்கள் தமிழக அரசுக்கும், இந்திய அரசுக்கும் பன்னாட்டு அரசுகளுக்குமாக அடிமைப் பட்ட நிலையில் உள்ளனர்.

எனவே, மூன்று வகை ஆளுமைத் தன்மைகளுக் குரியதாகக் கல்வித்துறை மூன்று வகை நிலையில் உள்ளது.

ஏற்கனவே ஏற்றத்தாழ்வான நிலையில் கல்விக் கூடங்கள் பணக்காரர்களுக்கு ஒருநிலையிலும் இடை நிலைப்பட்டவர்க்கு ஒரு நிலையிலும், அடிநிலை மக்களுக்கு ஒரு நிலையிலுமாக இருக்க, கல்விப் பாடத்திட்டமும் மூன்று வகைப்பட்டதாக இருக்கிறது.

சாதிவழி நம் குமுகம் கூறுபட்டிருப்பதுபோல, கல்வி நிலையிலும் கூறுபடுத்தப்பட்டிருக்கிறது.

அவற்றை மாற்றி ஒரே நிலையினதாகக் கல்வி முறையைக் கொண்டுவருவது கட்டாயமானது.

அப்படி ஒரே தன்மையில் கொண்டுவர வேண்டு மானால், எந்தத் தன்மையில் யாருடைய ஆளுகையின் கீழ்க் கொண்டுவருவது என்பதே முதன்மைக் கேள்வியாகின்றது.

ஒரு மொழித்தேசம் என்பது தனக்கென்று ஒரு பண்பாட்டை, ஒருவகை வாழ்க்கைத் தேவையை, ஒரு வரலாற்றைக் கொண்டிருக்கிறது. காசுமீரத்தின் பண்பாடும், வாழ்க்கைத் தேவையும், வரலாறும், கேரளாவுக்குரியதாக, தேவைப்படுவதாக இருக்க முடியாது.

போலவே, மிசோரம், நாகலாந்து, மணிப்பூர், திரிபுரா மக்களின் பண்பாடும், வாழ்க்கை முறைகளும், வரலாறும் கருநாடகவிற்குரியதாகவோ, தேவைப்படு வதாகவோ இருக்க முடியாது.

ஆக, அதன்வழியில்தான் ஒவ்வொரு மொழித் தேசப் பண்பாடும், வாழ்க்கை முறைகளும், வரலாறும் வேறுபட்டனவாக இருக்க அவற்றையொட்டிய கல்வியும் வேறுபட்டனவாகவே இருக்க முடியும்.

எனவே காசுமீரத்துக்கான கல்வியைக் கேரளமோ, கேரளத்துக்கான கல்வியை மிசோரமோ, மிசோரத்துக் கான கல்வியைத் தமிழகமோ தரமுடியாது.

ஆகையால் வெவ்வேறுபட்ட அக்கல்வி முறைகளை அந்தந்த அரசுகளே பொறுப்பெடுத்து நடத்த முடியும்.

எனவே இந்திய அளவில் ஒரே கல்விமுறை என்பது இந்திய அதிகாரவெறி அரசின் ஆளுமையைப் பிற மொழியின மக்களின் மீது திணிப்பதாகவே அமைந்துவிடும்.

அந்த வகையில் இந்திய - பன்னாட்டு அரசுகளின் அதிகாரத் திணிப்புக்கு ஆட்பட்ட நிலையிலேயே தமிழகம் தன் தனித்துவமான கல்வி முறையை இழந்திருக்கிறது.

எனவேதான்,

**தமிழ்நாட்டுக் கல்வியின் அதிகார எல்லை**
**தமிழ்நாட்டு அரசுக்கு அல்லாமல்**
**வேறெந்த அரசுக்கும் இல்லை!**

என்ற முழக்கத்தை முதன்மை முழக்கமாகத் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் இந்த மூன்றாம் ஆண்டு மாநாடு முன்னிறுத்துகிறது.

அதேபோல்தான் - இந்திய நுழைவுத் தேர்வு முறையும். இந்தியா முழுமையும் ஒரேவகைக் கல்வி முறை என்பதே கூடாது என்கிறபோது இந்தியா முழுமையும் ஒரே தேர்வு முறையும் கூடாது என்பதையும் மிக அழுத்தமாக நாம் உணர்தல் வேண்டும்.

கல்வி முழுக்க முழுக்க வணிகக் கண்ணோட்டத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைகளுக்கு வழி அமைத்துத் தந்திடும் கல்வி முறையாகவே இருக்கிறது.

எனவே, தனியார்வயமாக்கம் எனும் அடிப்படையில் கல்விக்கூடங்கள் காசுபறிக்கும் நிறுவனங்களாகிவிட்டன.

அந் நிலையை மாற்றிட பள்ளி கல்வியையாவது முழுமையாய் இலவயக் கல்வியாக உடனடியாக மாற்றிட வேண்டியிருக்கிறது.

எனவே தனியார் கல்வி நிறுவனத்தைத் தடை செய்திடவும் அரசுப் பள்ளிகளையே வலுப் படுத்திடவும் வேண்டும்.

மேலும், அரசு ஊழியர்களின் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளிலேயே சேர்த்திட வேண்டும் என்றும் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் வலியுறுத்துகிறது.

அவ்வகையில், தமிழ்நாட்டு மக்களின், மாணவர் களின் அடிப்படைக் கல்வித் தேவைக்குரிய அனைத்தையும் முன்னெடுப்பதால் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் என்பது,

தமிழ்நாட்டு மாணவர்களின் இயக்கம், தமிழ்நாட்டு ஆசிரியர்களின் இயக்கம்...

அவர்களோடு தொடர்புடைய பெற்றோர்களின் இயக்கம்... எனவே அவ்வியக்க முயற்சிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வோம்!

தமிழ்நாட்டுக் கல்வி அமைப்பையே மாற்றி அமைப்போம்!

தமிழே கல்விமொழி!

தமிழ்வழிப் படித்தோர்க்கே அரசு வேலை!

தமிழ் நாட்டிற்கே கல்வி உரிமை!

என்பதை உறுதி செய்வோம்...

அவற்றை நிறைவேற்றிட ஒருங்கிணைவோம்!

●

# கத்தியின்றி அரத்தமின்றி செய்வோம் ஒரு போர் மருத்துவம் அதுவே நம் சித்த மருத்துவம்

சித்த மருத்துவர் **இளஞ்செழியன்**
சேலம்

பாரெங்கும் பரவலாக பார்க்கப்படாத ஒரு வாழ்வியல் முறையாக இருந்தது நம் சித்த மருத்துவம். தமிழ்நாட்டில் மட்டும்தான் அது தழைத்த செழித் தோங்கி வளர்ந்து சேவை செய்ய முடியும். ஆனால் அதன் நிலைமையோ, உறங்கிக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பலவகையான மருத்துவமுறை கல்லூரிகள் பல உள்ளன. அதில் ஆங்கிலமுறை மருத் துவமனைகள் ஏராளம் உள்ளன. ஏன் சித்த மருத்துவ கல்லூரிகள் பரவலாக திறக்கப்படவில்லை. காரணம் நாம் தாம். ஆம், நம் உயிரைவிட வேறொன்று தான் மிக முக்கியம் என்று நாம் நம்புகிறோம். நம்பவைக்கப் பட்டுள்ளோம். அப்படியொரு இழிநிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம், ஆம், நம் உயிர் என்பது தமிழ் தான். தமிழ் மருத்துவப் பெருங்கடவுள் திருமூலர் சொன்னது, “முறையாகத் தமிழ் படிக்கின் உயர் வளரும்”

ஆனால் இன்று நாம் தமிழ் பேசும் முறையும் படிக்கும் முறையும் முற்றிலும் மாறிவிட்டது. நம் தமிழ் நாட்டில் ஆரம்பகட்ட பாடவகுப்புகளில், தமிழ்முறை ஆரோக்கிய பாடத்திட்டத்தை வயதிற்கேற்ப புரியும் தன்மையுடன் செயல்முறைபடுத்த வேண்டும். மேல் வகுப்புகளில், அடிப்படை தமிழ்முறை ஆரோக்கியப் பாடத்திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அந்தோ பரிதாபம், நம் கல்விமுறை வெறும் பணம் பண்ணும் கருவிகளை உருவாக்கவே பயன்படுகிறது. மாறாக, எந்தச் சூழலிலும் வாழும் முறையை அல்லவா கற்றுத் தரவேண்டும். நமக்கு, நான்கு தலைமுறையாக போதிக் கப்பட்டது வெறும் அடிமைத்தனத்தைக் கற்றுக் கொடுக்கும் அடிமைக் கல்வி முறையே!

புழுங்கிய மனம் கொண்ட, நீட் தேர்வு - கண்களில் செந்நீர் தழும்பிட கேட்கிறேன்?

தமிழினம் செழிக்க வேண்டுமென்றால் நம் மரபுகள் காக்கப்படவேண்டும்.

தமிழ்வழிக்கல்வி முறை, நம் தமிழ் இன உரிமை, நம் உரிமை தேய்ந்து தேய்ந்து விளிம்பு நிலையில் உள்ளது என்பதை நாம் உணரவேண்டும்.

குறிப்பாக நம் சித்த மருத்துவத்தின் மகத்துவத்தை, பல நிலைகளில் நிலைநிறுத்த வேண்டும்.

தமிழ்வழிக் கல்விமுறையில் தலையிட தமிழனைத் தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை.

சமச்சீர் கல்விமுறை என்றால் என்ன என்று ஆண்டவர்களுக்கும் ஆள்பவர்க்கும் புரியவில்லையோ என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

ஆரம்பத்தில் அவனவன் தன் குடும்ப தொழிலை, தேறிய அறிவோடு செவ்வனே செய்து நலமோடு வள மோடு வாழ்ந்தான். பிறகு படித்தால் தான் வாழ்க் கையில் முன்னேற முடியும் என்ற புரட்டை சொல்லி நான்கு தலைமுறைகளாய் நம்மை நம்பவைத்து, எச் சூழலிலும் ஏதோ ஒரு கைத்தொழிலையோ, செய் தொழிலையோ செய்து செவ்வெனே வாழலாம் என்ற எண்ணத்தையும், நம்பிக்கையையும் தகர்த்து, வாழ்க் கைச் சூழலையே புரட்டிப் போட்டார்கள். இப்போது இவர்கள் கொண்டுள்ள கொள்கை பணமும், வசதியும், அறிவும் இருந்தால்தான் கல்வி கற்க முடியும் என்று பிதற்றும் பாணியில் இருக்கிறது. பணம், வசதி, அறிவு இருந்தால் எதற்கு கல்வி கற்க வேண்டும்?

அனைத்து மொழிகளிலும், அறிவாற்றல் மிக்கவர் கள் இருப்பார்கள். அவரவர் மொழிக்கேற்ப சிந்தனைக் கோணங்கள் மாறும். அறிவுக் கோணங்கள் வேறுபடும்.

நாம் நம் தமிழ் மொழி வழிக் கல்விக்கு வழிவகை செய்ய வேண்டும். அந்நோக்கத்தில் ஆளும் அரசுகள் செயல்படவேண்டும். வியாபாரக் கல்விமுறை, எதிர்கால சந்ததியினரை அடிமை சந்ததிகளாக உருவாக்கும். ஒருபோதும் அதற்கு இந்த தலைமுறை ஒத்துபோக கூடாது.

இது தேவையா? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

# கல்வி உரிமையும் அரசியல் உரிமையும்

**முனைவர் விஜய் அசோகன்**
முதுநிலை அறிவியல் ஆய்வாளர், சீனா

ஒரு தேசியம், ஒரு மொழி கொண்ட பல்வேறு நாடுகள் பள்ளிக்கல்வி வழங்கும் தங்கள் அரசு நிறுவனங்களைக் குவிமையப்படுத்தாமல் மாநில அல்லது மாவட்ட அல்லது பேரூராட்சிகளின் ஆளுமைகளுக்குள் விட்டுக் கல்வியை ஒழுங்கமைப்ப தில் வெற்றிப்பெற்றுக் கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் பல்வேறு தேசங்கள் பல நூறு மொழிகள் கொண்ட இந்தியப் பெரு நிலப்பரப்பில் கல்வி மைய அரசின் கட்டுப்பாட்டில் பெரும்பகுதியை வைத்துக் கொண்டு இருப்பதே முரணாக இருக்கிறது.

கல்வி மட்டுமல்ல, எல்லாவிதமான நிறுவன அல்லது அரச செயல்பாடுகள் குவிமையப்படுத்தப் பட்டால் அங்கு ஊழலுக்கும் நிர்வாக சீர்கேட்டிற்கும் தரக்குறைவிற்குமே வழியிருக்கும். நிறுவன உறுப்புகள் தங்கள் பொறுப்புகளைக் கீழ் நிலை வரை அதிகாரத்தோடு பிரித்துச் செயல்படும்பொழுதே நிலம் சார்ந்த சமூகப் பொருளாதாரம் சார்ந்த அனைத்துத் தரப்பு மக்களுக்கு எல்லா சேவைகளும் சென்று சேரும்.

இந்தியப் பெரு நிலப்பரப்பில், ஏனைய மாநிலங் களை ஒப்பிடும்பொழுது, தமிழகத்தில் மட்டும்தான் மருத்துவத் தரம், சாலைப் போக்குவரத்து மற்றும் அனைத்து விதமான சமூக நலத்திட்டங்கள், எல்லா இடங்களுக்கும் சென்று சேர்க்கும் சமூக பரவலாக்க ஒழுங்குமுறைகள் கொண்ட அமைப்பை உருவாக்கி யிருக்கிறோம். இதன் விளைவாக, எந்த ஒரு சமூக நலத் திட்டங்களும் கடைக்கோடி மனிதனுக்கும் சென்று சேரும் வழிமுறைகள் இங்கே வெற்றிகரமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் கல்வி என்பது பொதுப்பட்டியலில் இருந்து வந்தாலும் ஏற்கனவே இங்கே உருவாகியிருந்த அரசியல் அமைப்புகளும் தமிழக மண் சார்ந்து சிந்திக் கும் அரசியல் தலைவர்களும் கடந்த காலங்களிலேயே கல்விக்கென கூர்மையான செயல்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திய விளைவின்பால் கடைக்கோடி கிராமங்கள் வரை கல்வி சென்று சேர்க்கப்பட்டது.

ஆனாலும், தாய்மொழி வழிக் கல்வியினைச் சென்று சேர்க்கும் முறைமைகளில் தோல்வியைக் கண்டிருக்கிறோம் என்பதனையும் மறுப்பதற்கில்லை. தாய்மொழி வழிக்கல்விக்கான வெற்றி, கல்வி முழுமையான மாநில ஆளுகைக்குள் வருவதிலும் வருங்காலத்தில் முறையான செயல்திட்டத்தை வகுப்பதிலும் தங்கி நிற்கிறது என்பதனையும் நினைவில் நிறுத்தி, அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட ஆசிரியர் கூட்டமைப்புகளின் கையில் தாய்மொழி வழிக்கல்விகான நடைமுறை வெற்றி இருக்கிறது என்பதனையும் நினைவில் நிறுத்திக்கொள்வது நல்லது.

உலக வர்த்தக அமைப்பு கல்வியை சேவைப் பட்டியலில் இருந்து வர்த்தகப்பட்டியலுக்கு மாற்றத் துடிக்கும் இன்றைய காலக்கட்டத்தில் நாம் முதலில் இழக்க இருப்பது தாய்மொழி வழிக்கல்வியையே என்பதனையும் மறந்துவிட வேண்டாம். நாம் இங்கே இருக்கும் அமைப்புகளையும் மக்களின் மனங்களை யும் தாய்மொழிக்கல்விக்கு ஆதரவாகத் திரட்டும் முன் நமக்குப் பெரும் சவாலாக முளைக்கவிருப்பது உலக வர்த்தக அமைப்பின் செயல்திட்டங்களும் பிஜேபி அரசாங்கம் புகுத்த நினைக்கிற புதிய கல்வித் திட்டமும்தான்.

உலக வர்த்தக அமைப்பின் கல்வியை வர்த்தகப் பட்டியலுக்கு மாற்றம் காண ஒன்றுகூடிய நைரோபி 2015 மாநாட்டிற்கு வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா

சீதாராமன் சென்று வந்ததையும் இங்கே நினைவில் வைத்துக்கொள்க! உலக வர்த்தக அமைப்பின் கல்வி சார்ந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்த பல்வேறு நாடுகளில் ஆப்பிரிக்க நாடுகளே அதிகம். உலக வர்த்தக அமைப்பின் இவ்வொப்பந்தம் தாங்கள் இதுவரை காலங்கள் காத்து வந்த தங்கள் தாய்மொழியை இந்த ஒப்பந்தம் அழித்துவிடும் என்றே அவர்கள் அஞ்சினர்.

தாய் மொழிக் கல்வியில் தீர்க்கமாக இருக்கும் ஐரோப்பிய நாடுகளை இந்த ஒப்பந்தம் சீண்டவில்லை என்பதனையும் தாய்மொழிக் கல்வி மட்டுமல்லாது தங்கள் நாட்டின் எல்லா அரசு நடைமுறைகள், சமூகச் செயல்பாடுகள், தொழில் நுட்பம், மருத்துவம் வரையிலான கல்வி, பொதுப்போக்குவரத்து, பொது மருத்துவமனை என அனைத்திலும் இறுக்கமாகத் தாய்மொழியை நிலைநிறுத்தி வைத்திருக்கும் ஜப்பான், சீனா, கொரிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தை நிராகரித்தது என்பதனையும் பொறுத்திப்பார்ப்பது நல்லது.

2015 நைரோபி மாநாட்டிற்கு முன் தமிழகம் உட்பட இந்தியப் பெரு நிலப்பரப்பின் பல பகுதிகளில் உலக வர்த்தக அமைப்பின் கொடிய ஒப்பந்தத்திற்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த வேளையில் யாரும் எதிர்ப்பாரா வண்ணம் அந்த மாநாட்டிற்குச் சென்ற அமைச்சர் நிர்மலா சீதாராமன் உலக வர்த்தக அமைப்பின் கல்வி ஒப்பந்தத்தில் கையெழுத்திட வில்லை என்பது பெரும் ஆச்சர்யத்தோடும் சந்தேகத் தோடுமே போராடியவர்கள் அவ்வெற்றியைக் கொண் டாடினோம். அந்த ஆச்சர்யங்களுக்கும் சந்தேகங் களுக்குமான விடையாக அதனினும் கொடுமையான பிஜேபி அரசினால் புதிய கல்விக்கொள்கை வழி இங்கே முன்வைக்கப்பட்டது.

உயர்க்கல்வியை மட்டும் குறிவைத்த உலக வர்த்தக அமைப்பின் கொடும் நஞ்சை விடக் கொடுமையான நஞ்சாகப் பள்ளிக்கல்வியையும் ஆக்கிரமிக்கும் பிஜேபி அரசின் புதியக்கல்விக்கொள்கை முன்வரைவு இருந் தது. உலக வர்த்தக அமைப்பின் எல்லா நஞ்சுகளையும் உள்ளடக்கி இந்தியப் பெரு நிலப்பரப்பின் எல்லா தேசிய இனங்களின் இருப்பையும் இல்லாதொழிக்கும் அரசியல் கோட்பாட்டோடு புதிய கல்விக்கொள்கை முன்னிறுத்தப்பட்டது.

புதியக் கல்விக்கொள்கையின் வரைவு அறிக்கை குழந்தை பருவத்தின் அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது எனவும் குறிப்பிடும் அதேவேளை தாய் மொழி வழிக்கல்வியை ஐந்தாம் வகுப்போடு நிறுத்த வேண்டும் எனவும் ஆங்கிலம் மட்டுமே தொடர் கல்விக்கான பயிற்று மொழி எனவும் கூறுவ தோடு சமஸ்கிருதம், இந்தி உள்ளிட்ட மொழி களுக்கான முக்கியத்துவத்தையும் தங்கு தடையின்றி நிதி உதவி செய்யவும் பரிந்துரைக்கிறது.

மிக சமீபத்தில், இந்திய ஒன்றிய அரசின் ஜனாதிபதி எல்லாவிதமான அறிவியல் புத்தகங்களும் இந்தியில் இருப்பதோடு, எல்லா நூலகங்களும் இந்திப் புத்தகங்களால் நிரப்பப்பட வேண்டும் எனவும் உலக நாடுகளில் வெளிவரும் தொழில்நுட்பம் மருத்துவம் சார்ந்த புத்தகங்களை இந்தியில் மொழிப்பெயர்க்க தனி ஆணையம் அமைக்கவும் பரிந்துரைக்கப்பட்ட மைய அரசின் கொள்கைத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியிருந்தார்.

இதற்கும் அப்பால், உலக வர்த்தக அமைப்பின் கல்விக்கொள்கையும் பிஜேபி அரசின் கல்விக்கொள் கையும் ஒரு சேர சந்திக்கும் இடம்தான் மருத்துவ, பொறியியல், சட்டக்கல்விகளுக்கான பொது நுழைவுத் தேர்வு நடைமுறை. 'நீட்' உள்ளிட்ட பொது நுழைவுத் தேர்வு சமூக நீதிக்கு எதிரானது, அது நம் மண்ணின் மைந்தர்களுக்குரிய உயர்க்கல்வி இடங்களை இல்லாதொழிக்கும், அதோடு உலக வர்த்தக அமைப் பின் கல்வி வர்த்தகம் என்னும் முழக்கத்திற்கு வலு சேர்த்து பொருளாதார பெரும் பலம்கொண்ட சமூகத் தினரை சாதி, மதம், இனம், மொழிக்கு அப்பால் அரவணைத்துக்கொள்ளும் என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்!

ஒரே நேரத்தில், உலக வர்த்தக அமைப்பின் செயல் திட்டங்களை முறியடிக்க, ஆளும் பிஜேபி அரசாங்கத் தின் கொடிய விசம் கொண்ட கல்விக்கொள்கையை அறுத்தெறிய, தாய்மொழிக்கல்விக்கான கல்வியை இச்சமூகத்தில் பரவலாக்க, நாம் களமாட நாம் முதன் முதலில் தேர்ந்தெடுக்கும் களம் கல்வியை மைய அரசின் பிடியில் இருந்து காப்பாற்றிப் பொதுப்பட்டியல் என்னும் கண்துடைப்பு சட்ட நடைமுறையை இல்லா தொழித்து மாநில நிர்வாகப் பட்டியலுக்கு மாற்றம் செய்வதே ஆகும்.

தாய் மொழிக் கல்வியைப் பறிப்பதென்பதும் பல்வேறு தேசிய இனங்கள் கொண்ட நாட்டில் நிலம் சார்ந்த தேசிய இனங்களுக்கு யாரோ ஒருவன் ஆளுகைக்குள் இருப்பதும் தாய் மொழியை அழிப்ப தில் தொடங்கி தேசிய இனத்தை கருவருப்பதில் வந்து முடியும். நம் கல்வி நம் உரிமை முழக்கம் தாய் மொழிக் கல்விக்கானது மட்டுமில்லை! சமூக நீதிக்கான பயணத்தில் இம்முழக்கமே எல்லா தேசிய இனங்களின் இருப்பைத் தக்க வைப்பதிலும் தேசிய இனங்களின் அரசியல்/சமூக உரிமைகளுக்கான முழக்கமே ஆகும்.